உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—௩௯.] சித்திரபானு ௵ வைகாசி ௴ [பகுதி—௭.
Vol. 39. May—June 1942. No. 7.

உள்ளுறை.

| | | |
|---|---|---|
| கம்பராமாயண சாரம்:— | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C. | ௩௨௧—௩௪௮ |
| திருப்புல்லாணிச் சேகநாதர்பேரில் வண்ணம்:— | | ௩௪௯—௩௫௩ |
| திருப்புல்லாணிச் சேகநாதர்பேரில் ஊசல்:— | | ௩௫௪—௩௫௬ |
| திருப்புல்லாணிப் பதுமாசனித்தாயார்பேரில் ஊசல்:— | | ௩௫௭—௩௫௮ |
| குறிப்புக்குப் பிற்குறிப்பு:— | ஸ்ரீ. S. S. பாரதியார் M.A., B.L. | ௩௫௯—௩௬௦ |
| தத்துவப்பிரகாசர்காலம்:— | ஸ்ரீ. மு. அருணசலம் M.A. | ௩௬௧—௩௬௬ |
| மதிப்புரை:— | | ௩௬௭—௩௬௮ |

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1942.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களேயும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளேயும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

---

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | *யாப்பணியிலக்கணங்கள் ... ... ... | | | |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| 7. | *தோத்திரத்திரட்டு ... ... ... | | | |
| 8. | *தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| | *ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 9. | *அபிதானசிந்தாமணி ... ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... | 0 | 6 | 0 |
| 14. | *தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | | | |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... ... | 1 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—௩௯.] சித்திரபானு-ஷு வைகாசிமீ [பகுதி—௭.

Vol. 39. May—June 1942. No. 7.

## கம்பராமாயணசாரம்

[ராவ்ஸாகிப் ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.]

௩௧௭-ஆம் பக்கத் தொடர்ச்சி.

### பிரமனும் பரமனும் இராமனது பரத்துவத்தையும் சீதையின் கற்பையும் இராமனுக்குணர்த்தல்

தேவர்கள், பிரமதேவனைநோக்கி, 'திருமால் இராமனாக அவதரித்தநோக்கம், இராவணவதத்தோடு நிறைவேறிவிட்டது. சீதையின் சிறைத்தீட்டுத் தீக்குளித்தலால் தீர்ந்துவிட்டது. (தான் மேற்கொண்ட மனிதப்பிறவிக்கேற்ப) மாயையில் மயங்கியிருக்கும் இராமனுக்கு அவன் உண்மைநிலைமையை உணர்த்துவாயாக' என்றுகூறப் பிரமன், இராமனைநோக்கி, 'எம்பெருமானே! உன்னை மன்னர்குலத்தினருள் ஒருவனாக நினையாதே. வேதம், முடிவாகத் துணிந்துகூறிய மெய்ப்பொருள் நீயே. எனக்கும் சிவனுக்கும் தேவேந்திரனுக்கும் முனிவர்களுக்கும் உயிரோடுகூடிய எல்லாப் பொருள்களுக்கும் ஏனையவை யாவற்றுக்கும் நீயே கடவுளென் றறிந்தவர்களே, விடுவித்தற்கரிய (பிறப்புக்குக் காரணமான நல்வினை தீவினையென்ற) வினைக்கட்டினின்று விடுபட்டு வீடடைபவர்கள். இருபத்தைந்து தத்துவங்களுக்கும்* மேலானவன் நீ;

---

* தத்துவவிவரணம், கம்பராமாயணசார கிஷ்கிந்தாகாண்டக் காப்புப் பாட்டின் உரையில் விரித்துக்கூறப்பட்டிருக்கிறது. கம்பர்கடவுட்கொள்கை, அந்த நூலின் முதற்பாட்டின் உரையிற் 'கடவுட்கொள்கை' யென்ற தலைப்பின்கீழும், அதேநூலில் மந்தரைசூழ்ச்சிப்படலத்தில் 19-ஆம் பக்கத் திற் 'கரியமாலினு' மென்ற பாட்டுரையிலும் விளக்கப்பட்டிருக்கிறது.

உனக்குமேல் ஒன்றும் இல்லையென்று வேதம் கூறுகின்றது. எங்களுக்கெல்லாம் தாயாய் இல்லறத்தை மேன்மைபெற நடத்திக்காட்டிய சீதாதேவிமீது (நீ மனிதவடிவமெடுத்திருத்தற்குப் பொருத்தமாகக்) கோபங்கொள்ளுதலை ஒழித்திடுவாயாக' என்று (சீதை கற்பினுக்கு அக்கினிதேவன் சாட்சியானதினும் மேலானசாட்சியாகப்) பிரமதேவன் கூறினான். (பிரமதேவன் சாட்சிக்குமேற் சாட்சியாகச்) சிவபெருமான், 'இராமமூர்த்தி! உன்னை நீ ஒரு சிறிதும் உணர்ந்திலைபோலும். உலகுக்கெல்லாம் ஆதிமூர்த்தி நீ. அனைத்துலகுக்கும் தாய், சீதாதேவி. இவள், நீ வெறுத்துக் கைவிடத்தக்க தன்மையுடையவளல்லள். நீ இவளைக் கைவிடுவது தவறு. அதைச்செய்வாயானால் எல்லா உயிர்களும் இறந்திடும். இவள் திறத்துக்கொண்ட இகழ்ச்சியை மறந்திடுவாயாக' என்றான்.

### இராமன், தன்னைக்காண விண்ணினின்றுவந்த தசரதனை வணங்கல்

பின்பு, சிவபெருமான், இராமனது பிரிவாற்றாமையால் இறந்து வைகுண்டத்திலிருந்த தசரதனையடைந்து, 'நீ இராமனைக்கண்டு, அவன் ஐயுறவுநீங்கி மெய்யறிவுபெறும்படி தெளியச்செய்து அவன் வனஞ்சென்றபோது நீ அடைந்ததும் நெடுங்காலமாக நீங்காதிருப்பதுமான உன் மனத்துன்பத்தைப் போக்குவாயாக' என்றான். அவ்வாறே, விண்ணுலகத்திலிருந்து மண்ணுலகத்துக்குவந்த தசரதனை இராமன் அடிபணிந்தான். அவன் இவனை வாரியெடுத்து மார்பில் அழுந்தத் தழுவி ஆனந்தக்கண்ணீராட்டி நெடுங்காலமாக நெஞ்சைவிட்டு நீங்காதிருந்த துன்பம் அறவே நீங்கியொழிய, மகிழ்ச்சியடைந்து கூறுகின்றான். ]

201 அன்றுகேகயன் மகள்கொண்ட வரமெனு மயில்[1]வேல்
இன்று காறுமென் னிதயத்தி னிடைநின்ற தென்னைக்
கொன்று நீங்கல திப்பொழு தகன்றதுன் குலப்பூண்[2]
மன்ற லாகமாங்[3] காந்தமா மணியின்று[4] வாங்க.

கொண்டுகூட்டு: அன்று கேகயன்மகள் கொண்ட வரமெனும் அயில் வேல், இன்றுகாறும் என் இதயத்தினிடைநின்றது. (அது,) என்னைக் கொன்றும் நீங்கலது, இன்று இப்பொழுது, உன் குலப்பூண் மன்றல் ஆகமாம் காந்தமாமணி வாங்க அகன்றது.

பொருள்: (உனக்கு முடிசூட்ட முடிவுசெய்திருந்த) அந்த நாளில் கைகேயி (நீ காட்டுக்குப்போகவேண்டுமென்று என்னிடம் கேட்டுப்) பெற்ற வரமென்ற கூரிய வேலாயுதமானது, இதுவரையிலும் என் நெஞ்சிலே (பாய்ந்தபடியே நீங்காமல்) இருந்தது. அது, என் உயிரை நீக்கியபின்பும் (என் நெஞ்சைவிட்டு) நீங்காதிருந்தது; இன்று, (யான் உன்னைத் தழுவிய) இப்பொழுது, உன் மார்பாகிய காந்தத்தாற் கவரப்பட்டதனால், நீங்கிவிட்டது.

அயில் - கூர்மை; இரும்பு (தமிழகராதி). அயில்வேல், கூரியதும் இரும்பினாலாயதுமான வேலாயுதம் என்று பொருள்கொள்ள நின்றது. காறும் - வரையும். குலப் பூண் மன்றல் ஆகம் - சிறந்த (பொன்மாலை இரத்தினமாலை ஆகிய) ஆபரணமும், (துளவமாலை, மலர்மாலைகளின் நறு) மணமும் உடைய மார்பு. மணி மந்திர ஔடதமென்பதில், மணி விடம் நீக்கும் கல்லையுணர்த்துவதுபோலக் காந்தமணியென்பதில், மணி கல்லையுணர்த்தியது. 'முள்வாங்கி' என்பதிற்போல, 'வாங்குதல்', 'பிடுங்கியெடுத்துவிடுதல்' என்ற பொருள்படநின்றது.

'வரத்தை இரும்புமயமான (இரும்பு) வேலென்றதற்கேற்ப, இராமனது மார்பை அதனைக் கவரும் காந்த மென்றார்.' வை. மு. கோ.

கண்ணிற் பாய்ந்த ஊசியை வைத்தியன் ஊசிக்காந்தத்தால் நோவாது வெளிப்படுத்தலைக் கண்டிருந்த கம்பர், தசரதன்நெஞ்சிற் பாய்ந்திருந்த கைகேயிவரமெனும் அயில் (- இரும்பு) வேலை, இராமன், தன் மார்பாகிய காந்தத்தினால் நோவாமல் வெளிப்படுத்தினானென்றாரென்று, இப்பாட்டின் பொருளை விளங்கச்செய்யலாம்.

பாடபேதம்: [1] நெடு. [2] அகன்றது குலப்பூண், அகன்றநின் குலப்பூண். [3] மார்பமாம், ஆகமான். [4] வரந்தரமணியினின், மரகதத்தாணியின்.

[ 'நற்குணநற்செய்கைகளுடைய சற்புத்திரரைப்பெற்று மிக்க சிறப்படைந்தவரெவரும், என் காலிற்பட்ட தூளுக்கும் சமானமாகாரென்னும்படி, (திருமாலான ஒரு நீயே எனக்குப் புத்திரனாகி) என்னை மேம்பாடுறச்செய்தாய். உன்னைப்பெற்றதனால், மிக்க புகழுடன் மேலுலோகம்பெற்று உயர்வடைந்தேன்.'

'முன்பு (பூமியிலிருந்தபோது) நான் வணங்கிய தேவர் முனிவர்கள் இப்போது என்னைக் கைகூப்பித்தொழுகின்ற காட்சியைக்

காண்பாயாக. என்னைப் பிரமதேவனுக்குச் சரிசமானனாகச்செய்து அவனோடு ஓராசனத்தில் ஒக்க வீற்றிருக்கவைத்தாய்' என்று கூறி, இராமனை (இரண்டாம்முறை) இரண்டுகைகளாலும் வாரி யெடுத்து, மார்போடிறுகத் தழுவினான். பின்பு, தசரதன், சீதா தேவியினருகே சென்றான். அவள் அடிபணிய, ஆசீர்வதித்து, 'அம்மா! உன் நாயகன், உன்கற்பை உலகுக்குக் காட்டுவதற்காக உன்னை "அக்கினிப்பிரவேசஞ்செய்" யென்று கூறியதை விகற்ப மாக மனத்துக்கொள்ளாதே. அதற்காக, அவன்மீது கோபமுற வேண்டுமென்ற எண்ணமும் கொள்ளாதே. பொன்னைப் புடத்தீயி லிட்டு அதன் தூய்மையைப் புலப்படுத்தல்போல* உன்னைத் தீக்குளிப்பித்து நீ கற்புக்கரசியென்பதை உலகறியச்செய்தான், உன் உயிர்த்துணைவன்' என்றுகூறி, அவள்மனத்துள்ளே கோபம் ஒருசிறிதுமில்லாமையை (அவள் முகமலர்ச்சியால்) அறிந்து மகிழ்ந் தான்.

## தசரதன் இலக்குமணனைத் தழுவி முகமன்மொழிதல்

பின்பு, தசரதன், தன்னையே தான் தழுவினாற்போல, (ஈருடம்பு நெருக்கத்தால் ஒருடம்பென்று தோன்றும்படி) இலக்குமணனை யிறுகத் தழுவினான். தழுவியபோது தசரதனுடைய மகிழ்ச்சிக் கண்ணீர் (ஆனந்தபாஷ்பம்) பெருகி இலக்குமணன்சடைமுடியை நனைத்து மண்ணில் வழிந்தது. பின்பு, அவன், இலக்குமணனை நோக்கி, 'நீ உன் தமையனைப் பின்தொடர்ந்து வனத்துக்குவந்து கைங்கரியஞ்செய்ததனால், நீக்குதற்கரிய உன் பிறவித்துன்பத்தை யும் என் மனத்துயரையும் ஒருங்கே நீக்கினாய். இந்திரனது பெரும் பகைவனான இந்திரசித்தைப் போரில் வென்ற உன் தோள்வலிமை யே, தேவர் முதலிய பலராலும் இடைவிடாமற் பேசப்படுகின்றது. உலகத்தாருக்குத் துன்பஞ்செய்துகொண்டிருந்த பகைவரை

---

* வேறுலோகக்கலப்புற்ற தங்கம்போலன்றிச் சுத்தத்தங்கம், எத்தனை முறை புடமிடப்பட்டாலும் எடைகுறையாது. ஆதலால், சுத்தத்தங்கத்துக் குச் சோதனை புடமிடுதலென்று ஏற்பட்டது.

யொழித்துத் தருமத்தை நிலைபெறச்செய்தாய்*' என்று முகமன் மொழிந்தான்.

## தசரதன் இராமனுக்கு வரமளித்தல்

பின்பு, தசரதன் இராமனைநோக்கி, 'யான் உனக்குத் தாத் தக்கதொரு வரத்தைக் கேள்' என, இராமன், 'என்பிரிவுகாரண மாக இறந்த உன்னைக் காணப்பெறாத துன்பத்தை யான் (இறந்த பின்) மேலுலகத்திற்குவந்து உன்னைக் கண்டு நீக்கிக்கொள்ளலா மென்று எண்ணியிருந்தேன். இன்று காணப்பெற்றேன். இந்தப் பெறலரும்பேற்றினும் பெரியபேறு யாது உளது? (ஒன்றும் இல்லை)' என்று கூறினான்.† ]

202 ஆயி னும்முனக் கமைந்ததொன் றுரையென வழகன்
தீய ளென்றுநீ துறந்தவென் தெய்வமும்[1] மகனும்[2]
தாயுந் தம்பியு மாம்வரந் தருகெனத் தாழ்ந்தான்
வாய்தி றந்தெழுந் தார்த்தன[3] வுயிரெலாம்[4] வழுத்தி.[5]

கொண்டுகூட்டு: 'ஆயினும், உனக்கு அமைந்தது ஒன்று உரை' என, அழகன், 'தீயளென்று நீ துறந்த என் தெய்வமும் (கைகேயியும்) மகனும் (பரதனும்) (என்) தாயும் தம்பியும் ஆம் வரம் தருக' எனத் தாழ்ந்தான். உயிரெலாம் எழுந்து வாய்திறந்து வழுத்தி ஆர்த்தன.

---

* 'புரந்த ரன்பெரும் பகைஞனைப் போர்வென்ற வுன்றன்
பரந்து யர்ந்ததோ ளாற்றலே தேவரும் பலரும்
நிரந்த ரம்புகல் கின்றது நீயிந்த வுலகின்
அரந்தை யாம்பகை துடைத்தறம் நிறுத்தினை ஐய.'

புரந்தரன் - இந்திரன். ஆற்றல் - வலிமை. நிரந்தரம் - இடைவிடாமை. அரந்தை - துன்பம். அறம் - தருமம்.

† என்று பின்னரு மிராமனை 'யானுனக் கீவ
தொன்று கூறுதி யுயர்குணத் தோய்'என, 'உனையான்
சென்று வானிடைக் கண்டிடர் தீர்வனென் றிருந்தேன்
இன்று காணப்பெற் றேனினிப் பெறுவதென்?' என்றான்.

கூறுதி - கூறுவாய். இடர் - துன்பம்.

பொருள்: '(நீ கூறியது உண்மையே) ஆயினும், உன்கருத்துக்கிசைந்த ஒரு வரத்தைக் கேட்பாயாக' என்று தசரதன் கூற, இராமன், 'நீ, தீயவளென்று விலக்கிய என்தெய்வமும் (கைகேயியும்) அவள்மகனும் (பரதனும்) எனக்குத் தாயும் தம்பியும் ஆகும் வரம் தருக' என்று கூறி வணங்கினான். (அப்போது, அவனை, அவன் பெருந்தன்மையை அறிந்து) சகல சீவராசிகளும் உற்சாகங்கொண்டு வாய்விட்டுத் துதித்து வாழ்த்தி ஆரவாரித்தன.

துறத்தல் - நீக்குதல். எழுதல் - மனங்கிளர்தல் (தமிழகராதி) - உற்சாகங்கொள்ளல். ஆர்த்தல் - ஆரவாரித்தல். வழுத்தல் - துதித்தல்; வாழ்த்தல் (தமிழகராதி).

இந்தப் பாட்டில், இராமனை 'அழகன்' எனக் கவி கூறியது கவனிக்கத்தக்கது. இராமம் - அழகு (தமிழகராதி). ஆகவே, இராமத்தையுடையவன் இராமன் என்பதைக் கருத்துட்கொண்டு, இராமனை 'அழகன்' என்றாரெனலாம். 'எழுந்து, வாய்திறந்து, வழுத்தி, ஆர்த்தன' என இயையும்.

சிறியதாயான கைகேயியைக் 'கைகேயி' எனப் பெயர் மாத்திரத்தாற் குறிப்பது தகுதியன்று; தசரதன் தன் தேவியல்லளென்று வெறுத்து விலக்கியவளை அவன் தேவியென்றேனும் தன் சிற்றன்னையென்றேனும் அவனெதிரே கூறுவதும் தகுதியன்று: என்பவைகளை மனத்துட்கொண்டு, தன்திறத்தில் அவள் செய்தனவெல்லாம் தனக்கு இதமானவைகளே யென்ற எண்ணமுடைய இராமன், பொருத்தத்தினும் பொருத்தமாக அவளை 'என் தெய்வம்' என்று அருமையினும் அருமையாகக் கூறினானென்று இராமனுடைய மனநன்மையையும் வாக்குவன்மையையும் ஒருங்கு புலப்படுத்திய கவிசாதுரியம் கண்டு களிகூர்ந்து பாராட்டுதற்குரியது.

' "தாயும் தம்பியும் ஆம் வரம் தருக" என்றது அநாதியாய்வருகிற சத்திரியதருமத்துக்கு விரோதமாக மூத்தவனான இராமனைக் காடுசெல்லும் படியும், இளையவனான தன்மகனை நாடாளும்படியும் கைகேயி வரம்வேண்டின

மைக்காகத் தசரதன் அவள்மீது கோபங்கொண்டு "நீ என் மனைவியுமில்லை. உன்மகன் என்மகனுமல்லன்" என்று மனப்பூர்வமாக அவ்விருவரையும் வெறுத்து உறவொழிந்ததை இப்பொழுது மறந்து மீண்டும் அவர்களது உறவுமுறையைக் கைக்கொள்ளவேண்டுமென்று வேண்டியபடி. தசரதன் துறந்த விவரத்தை,

"இன்னே பலவும் பகர்வான் இரங்கா தாளை நோக்கிச்
சொன்னே னின்றே யிவளென் தார மல்லள் துறந்தேன்
மன்னே யாவான் வருமப் பரதன் றனையும் மகனென்
றுன்னேன் முனிவா அவனும் ஆகா னுரிமைக் கென்றான்"

என்ற அயோத்தியாகாண்டச்செய்யுளினல் அறிக' வை. மு. கோ. இங்கே, உரிமை பிதிர்கருமஞ்செய்யுமுரிமையை உணர்த்தியது.

பாடபேதம்: [1] உன் தேவியும். [2] சேயும். [3] எடுத்தார்த்தன, எடுத்தழைத்தன. [4] உலகெலாம். [5] வாழ்த்தி.

[ தசரதன், 'குற்றமற்ற பரதன் என் மகனுந்தன்மைபெறுக. உன்முடியைப் பறித்துச் சடையைக்கொடுத்து இராசகோலத்தை மாற்றித் தவக்கோலம்பூட்டிய பாவிமீதுகொண்ட கோபம், என்றும் நீங்காததாகும்' என்று கூறினன். இராமன் 'உயிர்களை நன்றாகப் பாதுகாக்கவேண்டிய பெரிய அரசுச்சுமையை, இது (அரசுச்சுமை) மிக்க குற்றத்துக்குக் காரணமானதென்று கருதாமல் ஏற்று யான் பிழைசெய்தேன். (அந்தப்பிழையை நீக்கியதன்றி) எம்பிராட்டி* இழைத்த பிழை யாது? (ஒன்றுமில்லை)' என்று கூறினன். அது கேட்ட தசரதன், கோபம்நீங்கி, இராமன் வேண்டுகோளுக் கிணங்கினன். ஆகவே, 'தசரதனிடத்துக் கைகேயிகொண்ட வரங்களும் (இராமன் காடாளுதலும் பரதன் நாடாளுதலுமென) இரண்டு, இராமன்கொண்ட வரங்களும் (கைகேயி மனைவியாதலும் பரதன் மகனாதலுமென) இரண்டு' என்று தேவர்கள் வியந்து கூறினர்கள்.

---

* 'இதன்முன் 'என் தெய்வம்' என்பதற்குக்கூறிய விசேடவுரை இப்போது 'எம்பிராட்டி' யென்பதற்கும் பொருந்தும்.

## தசரதன் திரும்பி மேலுலகத்துக்குச் செல்லுதல்

உண்மையின்பொருட்டு உயிரைக்கொடுத்து உயர்புகழ் படைத்த தசரதன்* 'நீங்கள் இங்கே யினிதிருங்கள். நான் போகின்றேன்' என்று கூறி, விடைபெற்று விமானமேறி மேலுலகத்துக்குச் சென்றான்.

## இராமன் தேவர்களிடம் வரம்பெறுதல்

தேவர்கூட்டங்கள், இராமனைநோக்கி, 'வேண்டும்வரங்களைக் கேட்டுக்கொள்வாயாக' என, அவன், 'போர்க்களத்தில் இராக்கதரால் இறந்த வானரரெல்லாரும் பிழைத்தெழும்படியும், அவர்கள் செல்லும் காடுகளும் மலைகளும் மற்றெல்லா இடங்களும் காய்கனி கிழங்குகளும் தேன்கூடுகளும் நல்லநீர்த்தடங்களும் உடையனவாகும்படியும் வரங்கள் கொடுங்கள்' என்று வேண்ட, பிரமனும் பரமனும் இந்திரனும் தேவர் முனிவரும் தனித்தனி இராமனைப் புகழ்ந்து 'உனது கிருபையால் இறந்த குரங்குகள் இழந்த உயிரையும் எல்லாக்குரங்குகளும் இனிய உணவுகளையும் பெறுவனவாக' என்று கூறினார்கள்.

## இறந்த குரங்குகள் திரும்ப உயிர்பெற்று இராமனை வணங்கல்

போர்தொடங்கியநாள்முதல், முடிந்தநாள்வரை, இறந்த வானரரெல்லாரும் பிழைத்தெழுந்து நிகழ்ந்தபோர்களையெல்லாம் நினைந்து வெற்றிபெற்றதுபற்றிக் களித்து ஆரவாரித்து இராமனை வணங்கி மகிழ்ந்தார்கள்.

---

* '..........................................உம்பரும் உலகும்
பரவும் மெய்யினுக் குயிரளித் துறுபுகழ் படைத்தோன்'

உம்பரும் உலகும் பரவும் மெய் - விண்ணோரும் மண்ணோரும் புகழும் உண்மை. உறுபுகழ் - மிக்க கீர்த்தி. தசரதன் தன்னிடத்துக் கைகேயி கொண்ட வரம் பொய்க்காமல் இராமனை வனம் செல்லவிட்டு அவன் பிரிவாற்றாமையால் இறந்து பெரும்புகழுற்றதனால் 'மெய்யினுக் குயிரளித் துறுபுகழ்படைத்தோன்' என்றார்.

### அனுமானைப் பரதனிடம் போகச்சொல்லிவிட்டுத் தேவர்கள் தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்லுதல்

பிரமனும் சிவனும் தேவர்களும், அனுமானைநோக்கி, 'இன்றோடு இராமனது பதினான்குவருட வனவாசகாலம் நிறைவேறுகிறது. நீ இன்று சென்று பரதனையடையவில்லையானால், அவன் அக்கினிப்பிரவேசஞ்செய்து இறந்திடுவான். இப்பொழுதே போவாயாக' என்று கூறி, இராமனிடம் விடைபெற்றுத் தங்கள்தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள்.

### இராம சீதா லக்குமணர் புட்பகவிமானமேறுதல்

இராமன், 'இன்றோடு பதினான்குவருடங்களும் கழிந்தனவானால், பரதன் இறந்திடுவான். அவன் இறந்தவுடனே என்குலத்தாரெல்லாரும் இறந்திடுவார்கள். இன்றே அயோத்திபோய்ச்சேரக் கூடிய வாகனமுண்டோ?' என வினவ, விபீடணன், 'ஆம்: இருக்கிறது. அது, இராவணன் குபேரனை வென்று அவனுடைய பெருஞ்செல்வத்தோடு பறித்துக்கொண்ட புட்பகவிமானம். அது, இந்த எழுபதுவெள்ளம் வானரசேனைமுழுவதும் ஏறினாலும் நிரம்பாமல், மிகுந்த வெற்றிடமுடையதாயிருக்கும். இந்தச்சேனையேயல்லாமல், இங்குள்ளாரெல்லாரும் ஏறுதற்கு இடமுடையது. அதனில் ஏறி, இன்றைக்கே அயோத்தியையடைவாய்' என்று கூறிச்சென்று அந்தப் புட்பகவிமானத்தைக் கொண்டுவந்தான். அதில் இராமன் ஏறினான். தேவர் வாழ்த்துக்கூறி மலர்மாரி சொரிந்தார்கள். தன்னை வணங்கிய திரிசடையைச் சீதை, 'நீ இலங்கையிலே தெய்வப் பெண்போல் வாழ்வாயாக' என்று வாழ்த்தி, விடைபெற்று, விமானமீதேறி, இராமனருகிற் சேர்ந்தாள். இலக்குமணனும் ஏறினான்.

### இராமன், சுக்கிரீவன் முதலிய வானரத்தலைவர்களையும் வானரரையும் 'உங்களூர்களுக்குப்போய் வாழுங்கள்' எனல்

இராமன், விபீடணனைநோக்கி, 'பிரமதேவனைக் குலமுதல்வனாகப்பெற்ற பெருமையுடையோனே! உன்னையடைந்தார்க்கு

நன்மைசெய்து நாட்டிலுள்ளார் நன்குபுகழ்ந்திட நன்மைகளெல்லா மடைந்து வாழ்வாயாக. இலங்கைநகருக்கு ஏகுவாயாக' என்றும், சுக்கிரீவனைநோக்கிச் 'சுக்கிரீவ! தசக்கிரீவனை* உன் உதவியினால் வென்றேன். கொடிய அரக்கப்படைத்தாக்குதலால் தளர்வுற்றிருக்கிற வானரசைனியம் தளர்ச்சிநீங்கும்படி அதனோடு நீ உன் ஊருக்குப்போய் வாழ்வாயாக' என்றும், அனுமானையும் அங்கதன் சாம்பவான் பனசன் நீலன் முதலிய படைத்தலைவர்களையும்நோக்கி, 'நீங்களெல்லீரும், உங்கள் உங்கள் ஊருக்குப்போய் வாழுங்கள்' என்றும் கூறினான்.

## அவர்கள் உடன்படாமை

இராமன் கூறியதைக் கேட்டவர்கள், திடுக்கிட்டு, உள்ளங் குலைய, உடம்பு நடுங்கத் தாழ்ந்து, தரையில் விழுந்து வணங்கி, 'நாங்கள் உன்னை நீங்கினால், எங்கள் உயிர் நீங்கும்' என்று கூறினார்கள்.

## விபீடணன் சுக்கிரீவன் முதலியோர் கூறுதல்

விபீடணன் முதலியோர், 'நாங்கள் அயோத்திமாநகரத்துக்கு வந்து நீ திருமுடிசூடும் திருவிழாவைக் கண்டுகளிக்கும் பெரும் பேறு பெறுமளவும் உன்னைப் பிரியாதிருந்து திரும்பும்படி திருவருள்புரிவாயாக' என்று வேண்டினார்கள்.

## இராமன் அனுமதிபெற்று எல்லோரும் புட்பகவிமானத்திலேறுதல்

இராமன், 'உங்களை உடனழைத்துச்செல்லவேண்டுமென்றே என்கருத்திருந்தது. யான் ஊர்க்குப்போங்களென்று முன் கூறியது, உங்கள் கருத்தை அறிவதற்காக' என, எல்லாரும் உடம்புடனே உம்பருலகையுற்றார்போல உவகையுற்றார்கள். அவன், 'நீங்கள் எல்லீரும் ஏறுங்கள்' என்றான். அவன் சொன்னதற்கு

---

* தசம் - பத்து. கிரீவம் - கழுத்து. தசக்கிரீவன் - பத்துக்கழுத்துக் களையுடைய இராவணன்.

முன்னதாக (மிக விரைவாக), சுக்கிரீவனும், அவன் படைத்தலைவர்களும், எழுபதுவெள்ளம் வானரசைனியமும், இராக்கதசேனையுடனே விபீடணனும், புட்பகவிமானத்தின்மீது ஏறினார்கள். இராமன் விருப்பத்தின்படி சுக்கிரீவனும் விபீடணனும் அவர்களுடைய சேனாவீரர்களும் மனிதவடிவங்கொண்டார்கள்.

## இராமன் இராக்கதசேனாபதிகள் இறந்த இடங்களைச் சீதைக்குத் தெரிவித்தல்

விமானம், இலங்கையை வலங்கொண்டுசெல்வதாகிக் கீழ்த்திசைவாயிலையடைந்தபோது, இராமன், சீதையைநோக்கி, 'இது, இராக்கதப்படைத்தலைவனான பிரகத்தன் வானரசேனாபதியான நீலனால் கொல்லப்பட்ட இடம்' என்றும், அவ்விமானம் தென்றிசைவாயிலைக் கிட்டியபோது, 'இது, சுபாரிசன் கொல்லப்பட்ட இடம்' என்றும், மேற்றிசைவாயிலை நண்ணியபோது, 'இது, இலக்குமணனால் இந்திரசித்து இறந்த இடம்' என்றும், வடதிசையை அண்ணியபோது, 'இது, என்னால் இராவணன் இறந்த இடம்' என்றும் தெரிவித்தான்.

## சேதுவின்சிறப்பைத் தெரிவித்தல்

கிழக்கினின்று மேற்கேசெல்லும் சூரியன் தெற்குநின்று வடக்கே சென்றாற்போல, மிக்க ஒளியுடைய புட்பகவிமானம் இலங்கையை விட்டு வடக்குநோக்கிச்செல்லும்போது இராமன், சீதையைநோக்கி, 'இதோ, கீழே காணப்படும் சேது(-அணை), நீ பிரிந்து பலநாள் கழிந்த பின், நான் சுக்கிரீவனோடு நட்புக்கொண்டு, அனுமானை உன்னிடம் அனுப்பி, உன் கலக்கத்தைப் போக்கி, உன் நிலைமையைத் தெரிந்த பின், வானரத்தலைவர் பரதகண்டத்தினின்று இலங்கைக்குச் செல்லுதற்கு வழியாகக் கடலிடத்தே கட்டிய அணைக்கட்டாம். இங்கேயுள்ள தீர்த்தக்கட்டம், பார்த்தமாத்திரத்தே பாவங்களைப் பறக்க அடிப்பது; தம்மில் முழுகினாலன்றிப் பாவங்களைப்போக்க வல்லனவல்லனவான கங்கை யமுனை கோதாவரி நருமதை காவேரி முதலிய புண்ணியநதிகளைக்காட்டிலும் மிகுந்த சிறப்புடையது.

தழற்கண்படைத்த சங்காரமூர்த்தியின் சடைமுடிமீது சாடும் கங்காதேவி, 'சேதுதீர்த்தமாகப் பெற்றேனில்லையே' யென்று வருந்திப் பெருந்தவம்புரிந்திடுகின்றாளென்றால், இதன் பரிசுத்தத்தைப் பகருவது எவ்வாறு!' என்றான்.

## இராமன் சீதைக்குத் தருப்பசயன முதலிய தலங்களைக் காட்டல்

புட்பகவிமானம் தருப்பசயனத்தையடைந்தபோது, 'இந்த இடம் வருணன் சரணமடைந்த இடம்' என்றும், அவ்விமானம் மேற்கொண்டு செல்லாநிற்கையில், 'இந்த மலை தமிழ்முனிவன் வைகும் பொதியமலை. அதோ தெரிகிறது, திருமாலிருஞ்சோலை. அப்பாற் காணப்படுவது, திருவேங்கடமலை' யென்றும் இராமன் கூறியபோது, சீதை 'அனுமானைக் கண்ட இடம் எது?' என, ருசியமுகபருவதத்தைச் சுட்டிக்காட்டி, 'அதுதான்' என்றான். விமானம் மேலுஞ்செல்ல, 'இதோ தெரிவது சுக்கிரீவனது இராசதானியாகிய கிட்கிந்தாநகரம்' என்று இராமன் சொல்லியபோது, சீதை, 'நான் பெண்கள்துணையின்றித் தனியளாய் அயோத்தியையடைந்தால் என் பெண்தன்மைக்குப் பெருமைதருவதாகாது. இந்நகரிலுள்ள வானரமாதரை இவ்விமானத்திலேற்றிக்கொள்ளவேண்டும்' என்று வேண்டினாள்.

## வானரமாதர் விமானமேறுதல்

இராமன், விமானத்தைக் கிட்கிந்தைநகரில் இறக்கிச் சீதை விருப்பத்தைச் சுக்கிரீவனுக்குத் தெரிவிக்க, அவன் ஆணையின்படி, அனுமான் வானரமாதரை மானுடமாதராக வடிவங்கொள்ளச் செய்து அழைத்துவந்து விமானத்தில் ஏற்றினான். அவர்கள், கண்ணாடி முதலிய மங்கலப்பொருள்களைக் காணிக்கையாகவைத்துச் சுக்கிரீவனையும் சீதையையும் வணங்கினார்கள்.

## விமானஞ் சென்றவழியிலுள்ள இடங்களை இராமன் சீதைக்குத் தெரிவித்தல்

விமானம் எழுந்துசெல்வதாயிற்று. இராமன், வழியிற் காணப்பட்ட இடங்களைச் சீதைக்குச் சுட்டிக்காட்டி, 'இது,

கோதாவரியாறு. இதனருகேயுள்ளது நாமிருவரும் பெருந்துய ருறும்படி பிரிந்த இடம். இது, தண்டகாரணியம். இது, சித்திர கூடம். இது பரத்துவாசராச்சிரமம்' என்று தெரிவித்தான்.

## இராமன்முதலியோர் பரத்துவாசராச்சிரமத்தையடைதல்

அப்போது, பரத்துவாசமுனிவன், இராமன்வருவதை ஞான திருட்டியினுல் அறிந்து, மற்ற முனிவர் சுற்றிவர எதிர்கொண் டுபசரிக்கும்படி வந்தான். இராமன், அவனைக் கண்ட அளவிலே, விமானத்தைக் கீழே இறக்கி, அவனெதிரேசென்று, பாதங்களில் விழுந்து பணிந்தான். பணிந்தவனைப் பரத்துவாசன் வாரியெடுத்து மங்கலவாழ்த்துக்கூறி மார்போடணைத்துத் தழுவி உச்சிமோந்து ஆனந்தக்கண்ணீர்சொரிந்து அபிடேகஞ்செய்தான். சீதையும் இலக்குமணனும் வணங்க, இருவருக்கும் ஆசிவழங்கினுன். சுக்கிரீ வன் விபீஷணன் முதலியோர் வணங்க, அவர்களெல்லாரையும் ஆசீர்வதித்தான். பின்பு, எல்லாரையும் தன் ஆச்சிரமத்துக்கழைத் துக்கொண்டுபோனுன். அங்கே அவன் இராமனைநோக்கி, 'நீ சித்திரகூடத்தைவிட்டுநீங்கித் தென்திசைத்தீமைகளெல்லாம்நீக்கி இங்கே திரும்பி என் இருப்பிடத்துக்குவரும்வரை நிகழ்ந்த செயல்களெல்லாவற்றையும் ஞானதிருட்டியாலறிந்து, ஞாபகத்தில் வைத்திருக்கின்றேன். இன்று, இங்கே, என் விருந்தினனுக இருப்பா யாக.* பரதன்நிலைமையையும் தெரிந்திருக்கின்றேன். அவன், நீ சென்ற தென்றிசையன்றி எத்திசையையும் மறந்தும் நோக்கா னுய், நீ திரும்பிவருவாயோ வாராயோவென்ற அச்சமுடையனுய்,

* சித்திர கூடந் தீர்ந்து தென்றிசைத் தீமை தீர்த்திட்
டித்திசை யடைந்தெ மில்லி னிறுத்தமை யிறுதி யாக
வித்தக மறந்தி லேன்யான் விருந்தினை யாகி யெம்மோ
டித்தின மிருத்தி யென்முன் மறைகளி னிறுதி கண்டான்.

தீர்ந்து - நீங்கி. இல் - வீடு. இறுத்தல் - தங்குதல். இறுதி - முடிவு. வித்தகன் - பேரறிவாளன். இருத்தி - இருப்பாய். மறை - வேதம். மறைகளின் இறுதி கண்டான் - வேதாந்தமறிந்தவன்; பரத்துவாசமுனிவனைக்குறித்தது.

உன்னைப் பிரிந்ததுன்பமே ஓர் உருக்கொண்டாற்போன்றவனாய், நீங்காமல் விழிநீர்வழிபவனாய், ஐம்பொறிகளையடக்கிக் காய் கனிகளே உணவாய்க்கொள்பவனாய்ப் புல்லுப்பாயே படுக்கையாக உடையவனாய், அயோத்திநகரிலுறையாமல் நந்திக்கிராமத்தில் வசிப்பவனாய், உன் திருநாமத்தை ஒருகணமும் மறவாதவனாய் இருக்கின்றான். இராவணனுடைய மலைகள்போன்ற இருபதுதோள்களையும் அந்த மலைகளுக்கு மேலுள்ள மலைகளாய்ப் பத்தென்னும் எண்ணுடையவைகளாய்த் தம் உச்சியிலே சிகரங்களையுடையனவாயுள்ள மலைகள்போன்ற கிரீடந்தரித்த பத்துத்தலைகளையும்* அறுத்தொழித்த வீரனே! நீ என்மனத்தைவிட்டகலாதவனாயிருந்தாயாதலால், பிரிந்தாயென்பது பொருந்தாது' என்றான். 'பிரமதேவனும் பரமசிவனும் துதிக்கத்தக்க தவத்தினால் உயர்ந்தோனே! உன்னை வணங்கி உன் அருளை மிகுதியாகப்பெற்று உயர்வுற்றேன். ஆதலால், எனக்குநேர், யானே, வேறொருவருமில்லை'† என்று இராமன் கூறினான். அதுகேட்ட பரத்துவாசன் மகிழ்ந்து, 'வேண்டும் வரம் கேள்' என, இராமன், 'குரங்குகள் செல்லுமிடங்களெல்லாம் காய்கனிகிழங்குகளும் தேனும் நீரும் செழிப்பாக இருக்கும்படி வரங்கொடுப்பாயாக' என, முனிவன் 'அவ்வாறாக' என்றான்.

### பரத்துவாசன் விருந்தளித்தல்

பரத்துவாசமுனிவன் இராமனைநோக்கி, 'உனக்கும் உன் சேனைகளுக்கும் விருந்து அமைப்பேன்' என்றுகூறி ஓமஞ்செய்து முடித்தபோது, தேவலோகத்திலுள்ள பலவகைப் போக்கியப்

---

* மலைகள் இராவணன் தோள்களுக்கும், அந்த மலைகளுக்குமேலுள்ள மலைகள் அவன் தலைகளுக்கும், இந்த மலைகளுக்குமேலுள்ள சிகரங்கள் அவன் தலைகளுக்குமேலுள்ள கிரீடங்களுக்கும் உவமை.

† 'உன்னையே வணங்கி யுன்ற னருள்சுமந் துயர்ந்தேன் மற்றிங்
கென்னையே பொருவும் மைந்தன் யானலா தில்லை' யென்றான்.

பொருவுதல் - ஒத்தல்.

பொருள்களும் அவனுடைய ஆச்சிரமத்திலே வந்து நிறைந்தன. (சுக்கிரீவன் விபீடணனென) அரசுபுரிவோர் ஆதியாக அடிமைசெய்வோர் அந்தமாக, எல்லாரும் எல்லேயில்லாத இன்பத்தை அநுபவிக்கும்படிசெய்து, தலேவனென இராமனுக்குத்தக்கபடி ராசோபசாரமாக அறுசுவையுண்டிகள் அமைத்துக்கொண்டிருந்தான்.

## இராமன் அனுமானே அயோத்திக்கு அனுப்புதல்

அப்போது, இராமன், 'அனுமானே! நீ அயோத்திக்கு வேகமாக ஏகி, என்சேமத்தைப் பரதனுக்குத் தெரிவித்து, அவன் தீக்குளிக்கச் சித்தஞ்செய்திருக்கும் தீயை அவித்து, அவன் நிலேமையை அறிந்து என்னிடம் வந்துசேர்வாயாக' என்று கூற, இராமனுடைய முத்திரைமோதிரத்தை வாங்கிக்கொண்டு, அனுமான், தன் தந்தையாகிய வாயுவின்வேகத்தையும் தலேவனென இராமனது அம்பின்வேகத்தையும் மிஞ்சின வேகத்தோடு தனது மனமும் உடன்செல்ல முடியாததாய்ப் பின்தொடர்ந்து செல்லுமாறு விரைந்துபோகும்போது வழியிலே, குகனுக்கு இராமன் தென்றிசைநின்று திரும்பிவந்தசெய்தியைத் தெரிவித்துவிட்டுப் போனன்.

## பரதனது நந்திக்கிராமவாழ்க்கை

இதுவரையும் இராமன் தென்திசைசென்று செய்த செய்திகளைச் செப்பினேம். இனி அயோத்தியில் நிகழ்ந்தவைகளே நிகழ்த்துவோம் *

பரதன், அயோத்திநகரிலிருக்காமல், அதற்கு அடுத்துள்ள நந்திக்கிராமத்தில் வசிப்பவனய்க் காலே நடுப்பகல் மாலே யென்ற பூசைபுரிதற்குரிய காலங்களில்மட்டுமன்றி எக்காலத்தும் இடைவிடாமல் இராமபாதுகபூசைபுரிந்தவண்ணமாக இருந்தான். காண

---

* 'இது கவிக்கூற்று. ஒருநகரத்துக்குச்சமீபத்திலுள்ளவர் அந்நகரத்தைத் தமக்கு இடமாகச் சொல்லிக்கொள்ளுதல்போல, அயோத்தியின் மிகச் சமீபமான நந்திக்கிராமத்தில் நடந்த பரதன்வரலாற்றையும் அயோத்தியில் நடந்ததாகவே குறித்தார்'. வை. மு. கோ.

முடியாத அன்பு (இராமபத்தி) காணும்படி உருக்கொண்டதா மென்னும்படி (அன்புக்கு உருவிருந்தால் அது இப்படித்தான் இருக்குமென்னும்படி)யாக இருந்தான். நாட்டில் வாழ்ந்தும், காட்டில்வாழ்வாருணவான (இராமனுண்ணும்) காய்கனிகிழங்குகளையே உணவாகக்கொண்டிருந்தான். கண்ணைமூடிச் சதா இராமனைத் தியானித்துக்கொண்டிருப்பான். கண் திறந்துபார்ப்பானுனல், (இராமன்சென்ற) தென்திசை (நின்று அவன் திரும்பிவருவதைப் பார்ப்பதற்காக அந்தத்திசை)யன்றி வேறெந்தத்திசையையும் பாரான். இராமன் வரவில்லையேயென்று மிகவும் ஏக்கங்கொண்டு '(பொய்கூருத) சூரியகுலத்தான்; (ஆதலால், வருவேனென்று) சொன்னசொல் தவறமாட்டான்; வருவான்; வரவேசெய்வான் (இது திண்ணம்)' என்று மேலும்மேலும் பெருமூச்சுவிட்டுக் கொண்டு வருந்திப் பொருமியிருந்தான்*

## பரதன், இராமன்வாராமைகுறித்து வருந்தல்

அப்படியிருந்த பரதன், அயோத்திக்கு இராமன் திரும்பிவருதற்குக் குறித்ததினத்தைப்பற்றிச் சிந்தித்துச் சோதிடரைத் தருவித்துக் கேட்க, அவர்கள், 'இராமன் வரவேண்டியநாள் இன்றுதா' னென்று தெரிவித்தனர். உடனே, பரதன் மூர்ச்சித்துவிழுந்தான். மூர்ச்சைதெளிந்தபோது, 'இராமன் பதினான்கு வருடங்கழிந்த போது திரும்புவேனென்று எனக்குக்கூறிய தவணைகழிந்ததையும் அவன்பிரிவாற்ருமையால் யான்படும் பெருந்துன்பையும் தன்னைப் பெற்ற அன்னையின் ஆருத்துயரையும் பொறுத்துக்கொண்டு

---

* நோக்கிற் றென்றிசை யல்லது நோக்குறான்
ஏக்குற் றேக்குற் றிரவி குலத்துளான்
வாக்கிற் பொய்யான் வரும்வரு மென்றுயிர்
போக்கிப் போக்கி யுழக்கும் பொருமலான்.

ஏக்கம் (விரும்பியதுபெருமையால்வரும்) துக்கம். ஏக்கம் உறுதல், ஏக்குறலெனத் தொக்கது. இரவி-சூரியன். வாக்கு-வார்த்தை. உயிர்-சுவாசம் (தமிழ்ச்சொல்லகராதி). உழத்தல் - வருந்துதல்.

வனத்தில் வாழ்வதைவிட்டுத் திரும்பியிருப்பான்; திரும்பாமைக்குக் காரணம், தீவினைப்பயனாகப் பகைவர்கள் உண்டானார்கள் போலு'மென்று வருந்தினன்.* பின்பு, மும்மூர்த்திகளும் மூன்றுலகங்களிலுமுள்ள வேறு யாவரும் இராமனை எதிர்க்கவல்லாரில்லையென்று சந்தேகம் நீங்கி, 'வாராமைக்குக்காரணம் வேறு யாதோ? பரதன் பதினான்குவருடமும் ஆண்டதுபோதாமல் மேலும் அரசாட்சிசெய்ய விருப்புடையவனாயிருந்தால், அவன் விருப்பப்படி செய்யட்டும். அதற்கு நாம் திரும்பாதிருப்பதே சிறந்ததென்றெண்ணினனோ? (மேற்கூறிய காரணங்கள்) எல்லாவற்றிலும், எந்த ஒன்றாயினும் (இராமன்வாராமைக்குக் காரணம்) ஆகட்டும், அவன் காட்டிலிருக்கட்டும்? நாட்டுக்குத் திரும்பட்டும். (இனி இவைகளையெல்லாம் எண்ணிக்கொண்டிருந்து யான் பெருந்துன்பத்தில் அழுந்தமாட்டேன். என் உயிருடனே என் மனத்துன்பத்தை நீக்கிக்கொள்வேன்'† என்று எண்ணித் தூதரைச் சத்துருக்கனை இட்டுவரும்படி கட்டளையிட்டான்.

---

* 'எனக்கி யம்பிய நாளுமென் இன்னலும்
தனைப்ப யந்தவள் துன்பமும் தாங்கியவ்
வனத்து வைகல்செய் யான்வந் தடுத்ததோர்
வினைக்கொ டும்பகை யுண்'டென விம்முவான்.

இயம்புதல் - சொல்லுதல். இன்னல் - துன்பம். பயந்தவள் - பெற்றவள். வைகுதல் - தங்குதல். விம்முதல் - வருந்துதல் (தமிழகராதி).

† 'அனைத்தில் அங்கொன்றும் ஆயினும் ஆகுக;
வனத்தி ருக்கஇவ்; வையம் புகுதுக;
நினைத்தி ருந்து துயரம் உழக்கிலேன்;
மனத்து மாசென் உயிரொடும் வாங்குவேன்'

அனைத்தில் - எல்லாவற்றிலும். ஆகுக - ஆகட்டும். இருக்க - இருக்கட்டும். வையம்-பூமி; இங்கே கோசலநாட்டைக் குறித்தது. புகுதுக-பிரவேசிக்கட்டும். துயரம் - துன்பம். உழத்தல் - வருந்துதல். மாசு - மறு, இங்கே துன்பமென்றபொருள் கொள்ள நின்றது.

### பரதன் தனக்குப்பின் அரசபுரியும்படி சத்துருக்கனை வரம்வேண்டல்

வந்து வணங்கின சத்துருக்கனை மார்போடணைத்துத் தழுவி, 'ஐயா! நான் உன்னிடம் அழுதுகொண்டு வேண்டுவதொரு வரம் உண்டு. அது, குற்றமற்றதாதலால், நீ தரத்தக்கது. அது யாதெனில், சொல்லுகிறேன் கேள். இராமன் வருவதாகச்சொன்ன நாளில் வரவில்லை. அதனால் நான் என் பிரதிக்கினைப்படி தீயில் விழுந்து செத்திடுவேன். நீ என்சொல்லை மறுக்காமல் அரசுபுரிவாயாக' என்றான்.

### சத்துருக்கன் வருத்தமும் மனக்கவலையுங்கொண்டு கூறுதல்.

பரதன்கூறிய சொற்களைக்கேட்ட சத்துருக்கன், திடுக்கிட்டுப் பொறுக்கமுடியாத அச்சொற்கள் காதுக்குள்ளே புகாமல், கைகளால் காதுகளைப் பொத்தி, நஞ்சுண்டவன்போல நடுங்கினான். சோர்ந்துவிழுந்து மிகவும் விம்மிப் பொருமிப் பெருமூச்சுவிட்டு எழுந்து, '(நீ சாக), நான் உடனே யிறக்காமல் உயிரோடிருப்பதன்றி, அரசாளும் பாதகத்தைச் செய்யச்சொன்னாயே. (இப்படிச்சொல்லி என்னைத் தண்டிப்பதற்கு) நான் உனக்கு என்ன குற்றஞ்செய்தேன்?' என்று கொழுந்துவிட்டு நிமிர்ந்து எரிகின்ற கோபத்தையுடையவனாய்க் கூறினான் சத்துருக்கன்.* ]

203 கானாள நிலமகளைக் கைவிட்டுப் போனானைக்[1] காத்துப் பின்பு
போனானும் ஒருதம்பி போனவர்கள் வருமவதி போயிற் றென்று
ஆனாத உயிர்விட[2] நின் றமைவானும் ஒருதம்பி யயலே நாணா
தியானுமிவ் வரசாள்வேன் என்னேயிவ் வரசாட்சி யினிதே யம்மா![3]

---

*விழுந்து மேக்குயர் விம்மலன் வெய்துயிர்த்
தெழுந்து நானுனக் கென்ன பிழைத்துளேன்
அழுந்து துன்பத்தி னாயென் றரற்றினான்
கொழுந்து விட்டு நிமிர்கின்ற கோபத்தான்.

வெய்துயிர்த்தல் - பெருமூச்சுவிடுதல் (தமிழ்ச்சொல்லகராதி). பிழைத்தல் - குற்றஞ்செய்தல். அரற்றுதல் - பலவுஞ்சொல்லித் தன்குறைகூறுதல் (தமிழகராதி). கோபம்-மனத்தாபம். 'அழுந்து துன்பத்தினாய்' என்பதைத் 'துன்பத்து அழுந்தினாய்' என விகுதிபிரித்துக் கூட்டிக்கொள்க.

கொண்டுகூட்டு: 'நிலமகளைக் கைவிட்டுக் கானுளப்போனானைக் காத்து அவன்பின்பு போனானும் ஒரு தம்பி, போனவர்கள் வரும் அவதி போயிற்று: என்னா ஆனாத உயிர்விடநின்றமைவானும் ஒரு தம்பி, அயலே நானாது யான் அரசாள்வேனும்! என்னே!! இவ்வரசாட்சி இனிதே அம்மா !!!'

பொருள்: 'கோசலநாட்டைக் காவாமற் கைவிட்டுக் காடாளப் போன இராமனைப் பாதுகாத்துக்கொண்டு பின்தொடர்ந்துபோனவனும் (இலக்குமணனும்) ஒரு தம்பியாவன். போனவர்கள் (இராமலக்குமணர்கள்) திரும்பிவரவேண்டிய கால எல்லை கடந்துபோய்விட்டதென்று (உடம்பைவிட்டு) நீங்காத உயிரை (எரிபுகுந்து) நீக்குதற்கு ஆயத்தமாகிறவனும் (பரதனும்) ஒரு தம்பியாவான். இந்த இருதம்பியர் தியாகச்செயல்களுக்கு நேரெதிரிடையான கவர்தற்செயலாக, மற்றொருதம்பியான நான் வெட்கமின்றி அரசாட்சிசெய்வேனும். (இந்த, அநியாயச்செயலை யாதென்பது) இந்த அரசாட்சி இனிதானதே!' (மிகக்கொடியதென்றபடி)

கான் - காடு. நிலமகள் - பூமிதேவி; இங்கே கோசலநாட்டின் அரசாட்சியைக் குறித்தது. அவதி - எல்லை. என்னா - என்று. ஆனாத - (உடலை விட்டு) நீங்காத. அயல் - அன்னியம் (தமிழ்ச்சொல்லகராதி); - புறம்பு (தமிழகராதி); இங்கே அயல் இலக்குமணனுடைய பேரன்புகாரணமான தியாகச்செயல்களுக்கு நேரெதிரிடையாய்த் துராசைகாரணமான கவர்தற்செயலைக் குறித்தது. என்னே, அம்மா: அதிசய இரக்கக்குறிப்புச் சொற்கள்.

பாடபேதம்: [1] போவானை. [2] எரிபுக. [3] இருந்தவாறே.

[ '"இராமன் காட்டில் அலையும்போது, பரதன் அயோத்தியில் வாழ்ந்தானே" என்று உலகம்பழிப்பதற்கஞ்சி அந்த நகர்ப்புறத்தேயுள்ள நந்திக்கிராமத்திலிருந்து (இராசனாகவாழ்தற் கெதிராகத்) தவசியாகவாழ்ந்தாயே. உன்செயல் இப்படியிருக்க, நீ இறக்கும்போது யான் உன்னுடன் இறவாது உயிரோடிருப்பேனென்று எண்ணியிருக்கின்றாய். நீ இறந்தபின், நான் உயிர்வாழ்வதும் (நீ உயிரோடிருக்கும்போது உன் அரசாட்சியை வலிதிற் பறித்து) அரசாள்வதும் சரிசமானமே' என்று கூறினான் சத்துருக்கன்.

## பரதன் எரியமைக்கக் கட்டளையிடல்

'யான் இறந்துபோனால், உலகம் ஆள்வாரின்றி உலைவுறுவண்ணம் இராமன்வந்து ஆள்வான். நீ எரியமைப்பாயாக' என்று பரதன் சத்துருக்கனிடம் சொன்னான்.

## பரதனை எரிபுகாதுவிலக்கக் கோசலைகூறுதல்

நந்திக்கிராமத்தில் நிகழ்ந்தசெய்தி அயோத்திநகரத்திலறியப்பட்டபோது, கோசலாதேவி, ஏங்கிப் பரதன் இறந்தால், உலகோரெல்லோரும் இறந்தொழிவரென்று கூறி, வயிற்றிலறைந்துகொண்டு, அவன் எரிபுகுவதைத் தடுப்பதற்கு ஓடிவந்தாள். அவளை உறவினரான மாதரும் மந்திரிமாரும் சேனைத்தலைவர்களும் நகரத்தார்பலரும் கைகளைத் தலைமேல்வைத்து அழுதுகொண்டு பின்தொடர, அவள் அழுது புலம்பிக்கொண்டுவந்து, பரதனையடைந்தாள். கடுத்தற்கரிய வெள்ளம்போலச் சொரியும் கண்ணீர்ப்பெருக்குடையவளாய், நீண்ட சடைமுடி பின்புறத்தே அவிழ்ந்துவிழுந்து புரளவும், உடம்பு தள்ளாடவும், எரியமைத்த இடத்துக்குச்செல்லும்வழியிடையே தன்னையடைந்தகோசலையைக் கண்டு, திடுக்கிட்டுப் பரதன் அவள்பாதங்களிற் பணிந்தான். அவள் அவனைத் தழுவிப் பிடித்துக்கொண்டு கூறுவாளானாள்.

'என் மகனே! தசரதமகாராசன் இறந்ததும், இராமன் காட்டுக்குப்போனதும், யான் முன்சென்மங்களிற்செய்த தீவினைப்பயன்களாம். ஆராய்ந்துபார்த்தால், இராமன்வராததும், அந்தத் தீவினைப் பயனேயாம். (இருவராலும் கைவிடப்பட்ட என்னை நீயும் கைவிடுவாய்) யாதுசெய்யத் தலைப்பட்டாய். நீ *இதனை எண்ணியபடி செய்வாயானால், நம்நாட்டுச் சனங்களெல்லாரும் தீப்பாய்வார்கள். (உன் விசேட அன்புக்குரிய) தாயரான நாங்கள்மட்டும் தீப்பாய்வோமல்லோம். தருமதேவதையும் தீப்பாயும். உலகம் நிலை

---

* தீக்குளித்தலையென்று சொல்லமாட்டாமல், இதனை யென்றாள்.

குலைந்திடும். இப்போது ஒரே ஒரு இராமனே உளன், அவனுடைய அன்பு உன் அன்புக்கு ஒத்ததாகாதென்பானேன். அனந்தகோடி இராமர்கள் உண்டானாலும் அவர்கள் எல்லாருடைய மொத்த அன்பு நீ ஒருத்தனுடைய தனியன்பை ஒவ்வாதது கிடக்க; கிட்ட வரவும்மாட்டாது. புண்ணியமே வடிவெடுத்துவந்ததென்று சொல்லத்தக்க உன் உயிர் போகுமானால், மண்ணுலகமும் விண்ணுலகமும் (அவைகளில் வாழும்) பிராணிகளும் அழியாமலிருக்குமோ ?* இராமன் இன்று வரவில்லையானால் நாளைவருவான்; நாளையும் வாரானாயின் இறந்தானென்று முடிவுசெய்யலாம் (தீப்பாய்வதை இன்று நிறுத்தி நாளை செய்யலாம்)' என்று கூறினாள்.

## பரதன் கோசலைசொல்லை மறுத்தல்

'அம்மா, உன்சொல்லை உன்மகன் மறுத்தானென்று மனத்துட்கொள்ளாதே. நான், என் தந்தையின் சத்தியவிரதத்துக்கும் நமது சூரியகுல ஒழுக்கத்திற்கும் பழுதுண்டாம்படி உயிர்வாழ்தலை விரும்பவில்லை. (இராமன் பதினான்குவருடங்கழிந்தவுடனே வரவில்லையானால், உயிரைவிடுவேனென்று) நான்செய்த சபதத்தை நிறைவேற்றுவேன். உண்மைக்காக உயிரைக்கொடுத்து உம்பருலகுற்ற மன்னனுக்கு (இராமனைப்போல்) நானும் மகன்தானே, (தந்தைசொற்படிசெய்வேனென்ற சபதத்தை நிறைவேற்றுதற்குக்) காட்டுக்குச்சென்ற இராமனுக்குமாத்திரமா,

---

* எண்ணில் கோடி யிராமர்க ளென்னினும்,
அண்ணல், நின்னரு ளுக்கரு காவரோ ?
புண்ணி யம்மெனும் நின்னுயிர் போயினால்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ !

அண்ணல் - பெருமையுடையவன்.

பரதன் உயிர்விடுவானானால், அவன் தன் ஓர் உயிரைப்போக்கியதற்கு மட்டும் உத்தரவாதியாயில்லாமல் எல்லாவுயிர்களையும் போக்கியதற்குப் பொறுப்பாளியாவானென்பது குறிப்பு.

(சபதம்நிறைவேறச்செய்தல்) கடன்? மற்றைத் தசரதகுமாரருக்கு இது (சபதம் நிறைவேற்றல்) குற்றமற்ற ஒழுக்கமன்றோ?'* என்று கோசலைசொல்லை மறுத்துக்கூறினான் பரதன்.

### பரதன் தீப்பாயத்தொடங்கிய சமயத்தில் அனுமான் தோன்றுதல்

பின்பு, பரதன் தீயில்விழுதற்குச் சித்தனாய் அதனை அணுகி அக்கினிபூசைசெய்கின்றபோது, அனுமான் வந்தான்.

### அனுமான் இராமன்வருகையைத் தெரிவித்து அக்கினியை யவித்தல்

வந்த அனுமான், 'ஐயன்வந்தான்; ஆரியன்வந்தான்; சத்தியமென்ற உயிருக்கு ஆதாரமான சரீரம்போன்ற உன் உயிர் ஒழிந்தால், இராமன் உயிர்வாழ்வானோ?' என்று வாயினாற் சொல்லிக் 'கையினால் எரியைக் கரியாக்கினான்'.† பின், அவன், தன்தலை பரதன் தாள்களில் தாக்கும்படி தாழ்ந்து வணங்கிக் கையால் வாயைப் பொத்திக்கொண்டு, 'ஒருவார்த்தை கூறுகின்றேன்; அதனை ஏற்றுக்

---

* யானும் மெய்யினுக் கின்னுயி ரீந்துபோய்
வானுள் எய்திய மன்னவன் மைந்தனால்
கானுள் எய்திய காகுத்தற் கேகடன்?
ஏனை யோர்க்கி திழுக்கில் வழக்கன்றோ?

கான் - காடு. வான் - விண்ணுலகு. ஏ, வினைப்பொருளைத்தரும் ஓரிடைச்சொல். ஏனையோர் - மற்றவர். இழுக்கு - ஈனம் - தவறு (தமிழ்ச் சொல்லகராதி). வழக்கு - நீதி.

† ஐயன் வந்தனன் ஆரியன் வந்தனன்
மெய்யின் மெய்யன்ன நின்னுயிர் வீடினால்
உய்யு மேயவ னென்றுரைத் துட்புகாக்
கையி னாலெரி யைக்கரி யாக்கினான்.

ஐயன் - தலைவன். ஆரியன் - பெரியோன். மெய்யின்மெய் - உண்மைக்குமேலான உண்மை; சத்தியத்தின் உயிருக்கு ஆதாரமான சரீரம். வீடினால் - இறந்தால். ஐயன் ஆரியன் அவன், இராமனைக் குறித்தவை.

கொள்ளல்வேண்டு' மென்று கூறுவானானன். 'உன்னை இராமன் வந்துசேர்வதாகச் சொல்லியநாளில் இன்னும் நாற்பதுநாழிகை உண்டு*. இந்தச்சொல் உண்மையன்றானால், நான் எரியில்விழுந்து இறப்பேன்' என்று கூறினான்.

## அனுமான் பரதனுக்கு இராமனுடைய முத்திரைமோதிரத்தைக் காட்டுதல்

பின்பு அனுமான், 'மாசற்றமனமுடையோனே! தேவதேவனான இராமபிரான் அருள்கூர்ந்து என்னிடம் அளித்துள்ள பெருமையான அடையாளம் இருக்கிறது. அதனைக் கொண்டு வந்திருக்கின்றேன். கண்டுகொள்வாயாக' என்று (இராமனுடைய முத்திரைமோதிரத்தைக்) காட்டினான்.† அதனைக் கண்ட அளவிலே, அது, பரதனுக்கும் உலகத்துள்ள மற்றெல்லாருக்கும் விடமுண்டு இறக்குந்தறுவாயிலிருப்பார்க்கு ஊட்டப்பட்ட தேவாமிர்தத்தையொத்திருந்தது. (அப்பொழுது, அங்குள்ளார் எல்லாருடைய) கதறியழுதுகொண்டிருந்த வாய்களெல்லாம், உற்சாகங்கொண்டு ஆரவாரித்தன. கண்ணீர்சொரிகின்ற கண்களெல்லாம்

---

* இதனால் பகல் இருபதுநாழிகையானபோது, பரதன் எரிபுகத் தொடங்கினனென்பது பெறப்படும்.

† அண்டர் நாதன் அருளி யளித்துள
துண்டொர் பேரடை யாளம் உனக்கது
கொண்டு வந்தனன் கோதற்ற சிந்தையாய்
கண்டு கொண்டருள் வாயெனக் காட்டினான்.

அண்டர் - தேவர். அருளி - அருள்செய்து. அளித்து - கொடுத்து. பேர் அடையாளம் என்பது, பெருமையுடைய அடையாளமென்பதன்றி (இராமன்) பெயரையுடைய அடையாளமென்றலும் ஆம். கோது - குற்றம். சிந்தை - மனம்.

கண்ணீர்ப்பெருக்கு நீங்கின. (துக்கத்தால் நிலத்தில் விழுந்துபுரண்டு நிலத்தை) உழுவனபோல்வனவான தலைகள், (சந்தோஷத்தால்) நிமிர்ந்தெழுந்தன. கைகளெல்லாம் (நன்றியறிவுமேலீட்டால்) வாயுகுமாரனான அனுமானைத் தொழுவனவாயின*.

## கணையாழிபெற்ற பரதன்களிப்பு

பரதன் மோதிரத்தைவாங்கி முகத்தோடணைத்துக் கண்களில் ஒற்றி, உச்சியிற் சூடிக்கொண்டான். ஊதப்பறப்பதாய் மெலிந்த சருகுபோன்றிருந்த அவன் (பழைய) உடம்புநீங்கி வேறோருடம்பு பெற்றவன்போன்று (இவன் பரதனல்லாத) வேறொருவனோ? என்று சொல்லும்படியானான். அவன் வயிரத்தோள்கள் மலைகள்போன்றன.† அவன் அடைந்த பெருமகிழ்ச்சி அவனை ஆட்டுதலால், அது ஆட்டியபடி ஆடுவானாய் அழுவான்; சிரிப்பான்; அனுமானைக் கைகளால் தொழுவான்; உயர எழும்புவான்; மேலே துள்ளிக்குதிப்பான்; சோர்ந்து கீழேவிழுவான்; யாதுசெய்வதென்று தெரியாமல்,

---

* அழுகின்ற வாயெலாம் ஆர்த்தெ ழுந்தன
விழுகின்ற கண்ணெலாம் வெள்ளம் மாறின
உழுகின்ற தலையெலாம் உயர்ந்தெ ழுந்தன
தொழுகின்ற கையெலாம் காலின் தோன்றலை.

ஆர்த்தல் - ஆரவாரித்தல். எழுதல் - ஊக்கங்கொள்ளல் (தமிழ்ச்சொல் லகராதி). வெள்ளம் - (கண்) நீர்ப்பெருக்கு. கால் - வாயு(தேவன்). தோன்றல் - மகன்.

'எழுந்து ஆர்த்தன' என விகுதிபிரித்துக் கூட்டிக்கொள்க. 'விழுகின்ற' என்பது நிற்குமிடத்தின் ஆற்றலால் 'கண்ணீர்விழுகின்ற' என்று பொருள்படல் கவனிக்கத்தக்கது.

† ஊதுறப் பறப்பதா யுலர்ந்த யாக்கைபோய்
ஏதில னொருவன்கொ லென்ன லாயது!
மாதிரம் வளர்ந்தன வயிரத் தோள்களே!

யாக்கை - உடம்பு. போய் - நீங்கி. ஏதிலன் - அன்னியன். மாதிரம் - மலை.

திகைப்பான்; பூரித்த உடம்பு அதிகமாகப் பூரிப்பான்; வேர்ப்பான்; பக்கத்துள்ள கூட்டத்தைக் கூத்தாடச்சொல்லி, அந்தக்கூட்டத்தோடு கூத்தாடுவான்; கைகொட்டுவான்.* சோர்வுநீங்கி ஊக்கங் கொண்டு எழுந்து ஆரவாரிப்பான். 'இராமன் சேமமாயிருக்கிறான். அந்தச் சந்தோஷத்துக்காகக் கூத்தாடுங்கள், கூத்தாடுங்கள். அவனிடம் ஓடுங்கள் ஓடுங்கள்' என்பான். 'அவன் கீர்த்திகளைப் பாடுங்கள் பாடுங்கள்' என்பான். '(அனுமானாகிய இராம)தூதன் பாதங்களைத் தலைமீது சூடுங்கள், சூடுங்கள்' என்பான். 'தங்கமுடிபறித்துச் சடைமுடிகொடுத்து நாடாளல் தவிர்த்துக் காடாளல் விதித்து இராமனுக்குக் கேடுசூழ்ந்த மாமாயக் கைகேயியார், இப்போது அவன் நாடாளவந்துவிட்டதனால், தம்முயற்சி வீணாயிற்றேயென்று சோர்வடைவார். காட்டுக்குப்போனவனை நாட்டுக்குத் திரும்பி வந்து அரசாளும்படி நான் செய்தமுயற்சி பலனடைந்தது. அவர் தோற்றார். நான் வென்றேன்' என்றுகூறித் தன் வெற்றியைப் புலப்படுத்தத் தோள்களைக் கொட்டுவான். கால்கள் மண்டலாகாரமாகப் பொருந்தக் கருங்குன்று நடஞ்செய்தாற்போலக் கூத்தாடுவான். பாடுவான்† (பரதன் உள்பட எல்லாரும் இராமன் வரவேண்டு

---

* அழும்நகும் அனுமனை ஆழிக் கைகளால்
தொழுமெழும் துள்ளும்வெங் களிது ளக்கலால்
விழுமழிந் தேங்கும்போய் வீங்கும் வேர்க்குமக்
குழுவொடும் குனிக்குந்தன் தடக்கை கொட்டுமால்.

அழும் - அழுவான். நகும் - சிரிப்பான். ஆழி - மோதிரம். துளக்கல் - அசைத்தல் - ஆட்டுதல். வீங்கும் - (உடம்பு) பூரிப்பான். குழு - கூட்டம். குனிக்கும் - கூத்தாடுவான்.

† 'வஞ்சனை யியற்றிய மாயக் கைகையார்
துஞ்சுவர் இனி'யெனத் தோளைக் கொட்டுமால்;
குஞ்சித அடிகள்மண் டிலத்திற் கூட்டுற
அஞ்சனக் குன்றின்நின் றாடும் பாடுமால்.

கைகை - கைகேயி. துஞ்சுதல் - சோர்தல் (புறநா. 22, 38. தமிழகராதி). குஞ்சிதம் - வளைந்தது. மண்டிலம், மண்டலம் - வட்டம். அஞ்சனம் - கருநிறம். குன்றின் - குன்று (-மலை) போல. இங்கே, பரதன் நிறம் கறுப்பென்பது, நினைவுகூரத்தக்கது. 'கைகையார்' என்பதில், 'ஆர்' இகழ்ச்சிகுறித்த பன்மைவிகுதி.

மென்று அவரவர் இட்டதேவதையைப் பிரார்த்தித்ததனால், அவன் வந்தானென்று மனத்துட்கொண்டு, அவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவிக்கும் அடையாளமாக அங்குள்ள) வேதியரைத் தொழுவான். வேந்தரைத் தொழுவான். தாதியரைத் தொழுவான். தன்னைத் தொழுவான். ஆனந்தபரவசத்தினால் யாதொன்றையும் அறியாமல் உட்கார்ந்திருப்பான். எழுந்துநிற்பான். இவ்வாறு அன்பின்வசமான பரதன்செயல்கள், கள்ளின்வசமானவர்செயல்கள்போலிருத்தலால், அன்பென்பது, கள்ளின்தன்மையதே.*

### பரதன் 'நீ ஆர்?' என அநுமான் கூறுதல்

பின்பு, பரதன் (பரவசம்நீங்கித் தன்வசமுற்றபோது) அநுமானை நோக்கிப் 'பிராமணவடிவத்துடன் வந்திருக்கிறாய்; நீ அக்கினிப்பிழம்பை அகங்கைகளால் அநாயாசமாக அவித்துவிட்டதனால், உன்னைத் திரிமூர்த்திகளுள் ஒருமூர்த்தியென்று மதிக்கின்றேன். உன் வரலாற்றை யுரைப்பாயாக' என, அநுமான், 'நான் வாயுதேவனுக்கு, வானரசாதியில் மகப்பெறவேண்டித் தவஞ்செய்த அஞ்சனாதேவிவயிற்றிற் செனித்தேன்; உன் தமையனான இராமபிரானுக்குக் குற்றேவல்புரியுஞ் சிற்றாளாயுள்ளேன்; என் வடிவத்தை மாற்றினேன்; நான் ஒரு குரங்கு' என்றான்.

---

* வேதியர் தமைத்தொழும் வேந்தரைத்தொழும்
தாதியர் தமைத்தொழும் தன்னைத் தான்தொழும்
ஏதுமொன் றுணர்வுறா திருக்கும் நிற்குமால்
காதலென் றதுவுமோர் கள்ளின் தோற்றமே.

'ஏதும் ஒன்று' என்பதில் உம்மையைப் பிரித்துக்கூட்டி 'ஏதொன்றும்' (-யாதொன்றும்) எனக் கொள்க. காதல் - அன்பு.

'தன்னைத் தான்தொழும்' என்பதன் பொருள் தெளிவாக விளங்கும் வண்ணம், 'பரதன், தலைகவிழ்ந்து, தன் நெஞ்சைப் பார்த்துக் கண்ணாடிக்குள்ளே தான் காணப்படுவதுபோல அந்த நெஞ்சுக்குள்ளே தான் காணப்படுவதாகக்கொண்டு, அந்தத் தன்னை "ஏ பரதா! நீயும் இராமன் வரவேண்டுமென்று பிரார்த்தித்தாயாதலால், உன்னையும் தொழுகின்றேன்" என்ற பாவனையாகத் தன் நெஞ்சுக்கெதிரே கைகூப்பித்தொழுவான்' என்று விரிவுரைசெய்யலாம்.

## அநுமான் தனது பேருவடிவத்தைக் காட்டல்

பின்பு, 'அடியேன் எனது அற்பமான வானரசரீரத்தைக் காட்டுகின்றேன். உன் அருமைத்திருக்கண்களால் நோக்குவாயாக' என்று கூறி, மனிதவடிவை மாற்றித் தனது தலை விண்ணிலுள்ளோர்கண்ணுக் கெதிராகும்படி வளர்ந்தான். அந்த வடிவத்தைக் கண்டு, பரத சத்துருக்கரும் வசிட்டனும் அதிசயமடைந்தனர். சேனைவீரர் திடுக்கிட்டுச் செத்திலராயினும், மரணபயத்துக்கொப்பான பயமடைந்தனர். 'மண்ணிலேயுள்ள நாங்கள் பேசுவது (விண்ணிலே மிகுந்த உயரத்திலே உள்ள) உன் காதுகளை எட்டாதாதலால், உன் உருவைச் சுருக்குவாயாக' என்று பரதன் வேண்டினன்.

## பரதன் அநுமானுக்குப் பரிசுவழங்கல்

அநுமான், தன் உருவைச் சுருக்கிக்கொண்டு, பரதனைத் தொழுதுநின்றான். பரதன், அவனுக்கு நிதித்திரளும் பொன்னுபரணவருக்கமும் இரத்தினக்குவியலும் பசுக்களும் ஆள்களும் யானை குதிரை தேர்களும் பூமியும் பரிசாக வழங்கினன்.

## பரதன் அயோத்தியை அலங்கரிக்கும்படியும் எல்லோரும் இராமனை எதிர்கொள்ளும்படியும் முரசறைவித்தல்

எங்கும் தோரணக் கம்பங்கள் நாட்டி, அவைகளைச் சீலைகொண்டு சுற்றிப் பூரணகும்பங்கள் வைத்துத் தேர் யானை குதிரைகளைச் சிங்காரித்து, அயோத்திநகரை அலங்கரித்து, அதன் மதிற்புறந்தொட்டுப் பரத்துவாசாச்சிரமமட்டும் பந்தல்போட்டு, 'எல்லாரும் இராமனை எதிர்கொள்ளுங்கள்' என்று யானைமேல் முரசேற்றி அறைவிக்கும்படி பரதன் சத்துருக்கனுக்குக் கட்டளையிட்டான். அவன், சுமந்திரனைக்கொண்டு அந்தக் கட்டளையை நிறைவேற்றினன். அந்த முரசொலி, ஏழைக்குப் பொன்முடிப்பு அகப்பட்டாற்போன்ற மகிழ்ச்சியை எல்லாருக்கும் உண்டாக்கி, முன் இராமசீதையர்கலியாணத்தைக் காண 'மிதிலைக்குச் செல்லுங்கள்' என்று அறைந்த முரசொலியை ஒத்தது.

### எல்லாரும் இராமனை எதிர்கோள்ளச் செல்லுதல்

அறுபதினாயிரம் அக்குரோணி சேனையும் அந்தணர் அரசர் மாதர் முதலிய அயோத்திநகரத்துள்ளாரனைவரும் ஆனந்த மேலிட்டவராய், இராமனை எதிர்கொள்ளச் செல்வாராயினர். தாயர் மூவரும் பொற்சிவிகைமீது போயினர். முனிவரும் சுற்றத்தாரும் சூழ, அனுமான் கைலாகுகொடுத்துவரப் பரதன் பாதசாரியாய், இராமன்திருவடிநிலை (பாதுகை)கள் தலைக்குமேலே செம்பொற் கிரீடமாக விளங்க, இருபுறமும் சாமரைவீச மேலேவெண்கொற்றக் குடை நிழல்செய்ய, எழுகடல்களும் அஞ்சும் முழக்கமென்னும்படி வாத்தியம் ஒலிக்கச் சென்றான்*. சூரியன் அத்தமித்தான்.

### இராமன் பரதனைப்பிரிந்தபின் நிகழ்ந்தவைகளை அனுமான்கூறுதல்

'இராமன் காட்டிலே எங்கெங்கே தங்கினான்? என்னென்ன செய்தான்?' எனப் பரதன் வினவ, அனுமான், 'சித்திரகூடத்தில் உன்னைப் பிரியுமுன் நிகழ்ந்தவையனைத்தும் நீதெரிந்தவை' என்று கூறி, அதன்பின் தான் பரதனைச் சந்திக்கும்வரை நிகழ்ந்தசெய்திகளனைத்தையும் ஒன்றும் விடாமல் வழிநெடுக உரைத்துக்கொண்டு இரவுமுழுதுங்கழிய வழிநடந்தான். அனுமான் கூறியசெய்தி முழுதையும் கவனித்துக்கேட்ட பரதன், கண்ணீர் தாரைதாரையாகப் பெருக, 'ஒரு தம்பியாகிய இலக்குமணன் பணிவிடைசெய்து கொண்டு இராமபிரான்பின்சென்று பிரியாது உடனிருந்து இச்செய்திகளையெல்லாம் நேர்நேராகத்தெரிந்து அனுபவிக்கும்பாக்கியஞ் செய்தவனாக, மற்றொரு தம்பியாகிய நான், பின்னே தங்கி அச்செய்திகளைக் கேட்டல்மாத்திரமே செய்வேனானேன்; என் அடிமைத்திறம் புகழ்படைத்ததே' என்று வருந்தினான்.

[தொடரும்.]

---

* திருவடி யிரண்டுமே செம்பொன் மௌலியா
இருபுறஞ் சாமரை யிரட்ட, எழ்கடல்
வெருவரு முழக்கென வேழம் ஆர்த்தெழப்
பொருவரு வெண்குடை நிழற்றப் போயினன்.

திருவடி - பாதுகை. மௌலி - கிரீடம். இரட்ட - வீச. வெருவரும் - அஞ்சும். வேழம் - இசை (தமிழ்ச்சொல்லகாதி). ஆர்த்து - ஒலித்து.

ஸ்ரீ:

# திருப்புல்லாணிச்

# செகநாதர்பேரில் வண்ணம்*

சந்தக்குழிப்பு.

தனனு தனனு தனதத்த தனதத்த
தனனு தனனு தனதத்த தனதத்த
தனதத்த தனதத்த தனதத்த தனதத்த
தனதத்த தனதத்த தானன தான
தானதன தந்ததன தனதனு

## முதற்கலை

பதுமா தனமா தவிசிற்கொ லுவிருக்கு
மெழில்கூ றரிதா மெனவிற்க திரொளிக்கு
மணிமொய்த்த முடியுற்ற நறைகொட்டு மணமிக்க
துளவத்தி லளிசுற்றி யேழிசை பாட (கண்ணி—1)

---

* வண்ணம் - இசைப்பாட்டு. அது, எட்டுக்கலையாய்ப் பொழிப்பெதுகைவாய்ந்து, ஒவ்வோர்கலையினும் மும்மூன்றுகண்ணியும், ஒவ்வொரு கலைமுடிவிலும் ஒவ்வொரு தொங்கலும் பெற்று, தொங்கல்கள் எட்டினையும் முறையே கூட்ட வேறொருசெய்யுளாய்த் தோன்ற நின்று, முதற்கலையிற் பாட்டுடைத்தலைனது தெய்வத்திறமும், இரண்டாங்கலையில் அவனது கிளையும் கொடையும் விருதும், மூன்றாங்கலையில் அவனது புகழும் வெற்றியும், நான்காங்கலையில் அவனுடைய நாடும் நகரும் கூறிப் பிற்பாதியில், தன்னேரில்லா னொருதலைவன்பாற் காமமிக்க தலைவியொருத்தி அத்தலைவனைப்பிரிந்து தனியிருத்தற்காற்றாது பிறரறியாதவாறு அவனுடன்போயினளாக, அஃதறிந்து மகட்போக்கிய நற்றாய் இரங்குதல், அல்லது தான்விழைந்த தலைவியைத் தலைப்பட்ட தலைவனொருவன் அவள்பாற் கலவியின்மகிழ்தல் முதலிய துறைகளுள் ஏதேனும் ஒருதுறைபற்றி இயல்வதாகும். இம்முறையில் மகட்போக்கிய நற்றாய் இரங்கல் என்னும் துறைபற்றித் திருப்புல்லாணிச் செகநாதரைப் பாட்டுடைத்தலைவராகக்கொண்டெழுந்த இச்செய்யுளும், இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் உபாக்ராஸநரான திரு. T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களுடைய காகிதக்கையெழுத்துப்பிரதிபிலுள்ளவாறு வெளியிடப்பெறுகிறது. இதனை யியற்றியவர்பெயர் முதலிய விவரமொன்றும் தெரியுமாறில்லை. இதனுள், சிதைவுற்றபகுதி புள்ளியிடப்பெற்றுளது.

உதவியாசிரியர்.

இருபா ணியிலே யிருபத்தும் விகசிக்க
மகிழ்வே மிகு...........பத்தும் விகசிக்க
அடியர்க்கு மனதிட்ட முளதெத்த தனையித்த
னையுமக்க ணமளிக்கு மாவருள் மேவும் (கண்ணி—2)

பரிபூ ரணமா நயனப்ப துமபத்மம்
ஒளிவீ சிடவா மூமிலக்கு மிகடற்பெண்
அரசிக்கு மவனிக்கு மிடையக்க ணியருக்கும்
அதரக்க னிகொடுக்கு நாதர்நன் னீதர் (கண்ணி—3)

பூதலம ளந்ததிரு வடியினர் (தொங்கல்—1)

இரண்டாங்கலை

படர்பூ மியையோர் மனுவுக்கு தவுமத்தர்
அனமாய் மறைநான் முகனுக்கு ரைசெயத்தர்
பரவைக்கு ளெழுபுத்த முதுசொற்க வமரர்க்கு
மனதொப்பி யருளிச்செய் மோகன ரூபர் (கண்ணி—1)

மதியா தவிரா வணதுட்ட னகரத்தை
அடிமேல் விழும்வீ டணனுக்கி னிதளித்து
வளர்கற்ப தருவைத்தன் மயலுற்றொ ருமடக்கொ
டியுவப்ப வளர்முற்ற மேநடு சீலர் (கண்ணி—2)

பலரா சர்கள்கூ டுமவைக்குள் அனல்பெற்ற
மகளா னதுரோ பதைசித்த மிடரெற்றி
யுடையைக்க ரம்விடுத்து முயரக்கை யையெடுத்தும்
அபயச்சொ லிடவத்ர மீயுமு தாரர் (கண்ணி—3)

பூமனன னங்கனையு முதவினர் (தொங்கல்—2)

மூன்றாங்கலை

மதியா தவலோ சனபத்ம வதனத்தர்
மதுகா ளிகனீள் பயவத்தி மதனத்தர்
உலகுக்கு முயர்சொற்க தலமிக்க புலவர்க்கும்
இடரைத்த ருமரக்கர் மாயவெய் நேயர் (கண்ணி—1)

சகடா னதையோ ரடியிற்பொ டிபடுத்தி
விடையே ழையுமோர் கயிறிற்ப டவிறுக்கி
மருதற்று விழவெற்றி வலுவிற்று ணிபடுத்தி
இருளைப்ப கல்விரித்த வீரவொய் யாரர் (கண்ணி—2

வளரே ழுமரா மரமற்று ருவவெற்றி
யொருதா ரையினு யகனைத்து ணிபடுத்தி
வருகுச்சை யுடல்விக்ர மமகற்றி யடர்துட்டர்
களையட்ட விசயப்ர தாபசு சீலர் (கண்ணி—3)

சேதுபதி வாழ்ந்திடவன் பருள்செய்மால் (தொங். 3)

நான்காங்கலை

மகிழ்மா வகின்மா தளைகற்ப கம்வருக்கை
முதனீ டியபசோ லையினுற்றி டுமரத்தில்
உதிரக்க னிரசத்தில் வயல்நெற்க திர்தழைக்கு
மதின்முத்தொ ளிமதிக்கும் நீள்பிர காசம் (கண்ணி—1)

மறையோர் திருவீ தியிருக்கொ லிமுழக்கும்
மதிடூ விகள்கோ புரமுற்றும் நவரத்நம்
ஒளிதிக்கி னுமிறைக்கு முனிபத்த சனருற்ற
வளமுற்றி லகுநற்புல் லாணியில் வாசர் (கண்ணி—2)

மலர்மா மணிமா துளவுற்றி டுமுரத்தர்
வலியா ழிவில்வாள் கதைநத்த ணிகரத்தர்
கருணைக்க டல்செகத்தி லெளினுர்க்க ருள்ப்ரசித்தர்
தருணப் புயனிறத்தின் மால்செக நாதர் (கண்ணி—3)

சீதமதி சூழ்ந்தசிலம் பருகிலே (தொங்கல்—4)

ஐந்தாங்கலை

கொதிபா லையிலே யிவளெப்ப டிநடப்பள்
மிதுகால் நடையாய் வழியெப்ப டிகடப்பள்
கருகிக்கு ழியிருக்கு முருவச்சி லைகிடக்கும்
வடவைக்க னல்மிகுத்த தாய்வெகு தூரம் (கண்ணி—1)

அரவோ டுசொய் கலைமொய்த்தி டும்வனத்தில்
பயநீர் கிடையா தருமைச்சி மிழ்முலைப்பெண்
அவிடத்தில் வியர்வுற்று மதிமிக்க வயர்வுற்று
ளடிகொப்பு ளமுதிக்கு மேமெக ளான (கண்ணி—2)

கொடியா ளொருபா தகனுக்கு மயலுற்று
நொடிவே ளையிலே யெனைவிட்ட வனையிட்ட
முறவிட்ட தெவர்கைப்பொ டிமயக்கம் விதிபத்ம
னுயர்கற்ப னைவிசித்ர மேதுசொல் வேனன் (கண்ணி—3)

மாதரசி வாஞ்சைநினைந் துருகுதே (தொங்கல்—5)

## ஆறுங்கலை

குழையார் விழியாள் குயிலுக்கு மயிலிட்ட
கிளிபோன் மொழியாள் கொடிபொற்கொ டியிடைப்பெண்
அருமைப்பெண் ணிரதிப்பெண் ணுயர்சித்ரம் நவரத்நம்
இவளுக்கெ வருமொப்பி லாதவொய் யாரி (கண்ணி—1)

அநியா யமதாய் அயனிப்ப டிவிதித்த
தறியே னையயோ வுடனொத்த வர்சிரிக்க
ஒருமித்த குலமக்க ளெனைவக்க ணையுரைக்க
இருளைக்க னியர்சித்தம் வாடவும் நீடு (கண்ணி—2)

குலபா தகமா யுளவுற்ற களனுக்கு
மனதா யவள்போம் வழியிற்ற டமெடுக்க
எவரக்க ரைபிடிப்ப ரெவரிக்கு றைமுடிப்பர்
எவருக்கி துசகிக்கும் நீலிகொடு நீலி (கண்ணி—3)

மாயமிது நான்செயருந் தவமதே (தொங்கல்—6)

## ஏழாங்கலை

சதிகா ரியைநா னுதவத்து டிதுடித்த
குறிகேள் வியெலாம் வினவித்த வமுயற்றி
நிதமிக்க பொருளைச்செ லவழித்திவ் வுலகத்தெ
வருமெய்க்க வுமகிழ்ச்சி யாகின னீது (கண்ணி—1)

குலதே வதைகாள் மனதுக்கி வைசகிக்க
விலேயோ இதையா ரொடுகட்டு ரைபயிற்ற
மலடிக்கு மகளுக்கு மலேகட்கு மணுவுக்கும்
உவமைப்ப டவுரைத்த போதுமொவ் வாது (கண்ணி—2)

தனியா ரமுதே யமுதத்தி லுமினித்த
கனியே ரசமே மதுரச்சு வைதிரட்டும்
அடிகட்ட ழகிவெட்ட வெறுமைப்பெ ருவயிற்றில்
உறைகெற்ப நிலேபுக்க நீவரலாறு (கண்ணி—3)

மாதிவள்பி ரிந்தகுறை யொழியுமே (தொங்கல்—7)

எட்டாங்கலே

தனியே தனியே மறுகிப்ப ரதவிக்கும்
விழிநீ ரிணேயார் நிறுவித்து யரொழிப்பார்
முறுவற்சி றுமுகத்தை முகம்வைத்த தாமுத்த
மெதிரெட்டி யெதிரெ....யீகுவ தார்சொல் (கண்ணி—1)

மகளே மகளே கனகத்தி னிலமைத்த
கொடியே யுயிரே மடியிற்று யில்விடுத்த
உரையக்கு..............................
யெகினப்பெ டைகள்வெட்கம் நீவரு காது (கண்ணி—2)

சகியா திதிலே விதனப்ப டுவதிற்சொல்
பிரயோ சனமேன் சுரதத்தி னிலழைத்த
மருகற்கும் மகளுக்கும் மனதொத்து மதனுக்கு
மிரதிக்கு மிணேசெப்ப நாள்தொறும் விருத்தி (கண்ணி—3)

வாழியவ னும்பருவ மகளுமே (தொங்கல்—8)

பூதலம ளந்ததிரு வடியினர் (தொங்கல்—1)
பூமனன னங்கணேயு முதவினர் (தொங்கல்—2)
சேதுபதி வாழ்ந்திடவன் பருள்செய்மால் (தொங்கல்—3)
சீதமதி சூழ்ந்தசிலம் பருகிலே (தொங்கல்—4)
மாதரசி வாஞ்சைநிணேந் துருகுதே (தொங்கல்—5)
மாயமிது நான்செயருந் தவமிதே (தொங்கல்—6)
மாதிவள்பி ரிந்தகுறை யொழியுமே (தொங்கல்—7)
வாழியவ னும்பருவ மகளுமே (தொங்கல்—8)

ஸ்ரீ:

## திருப்புல்லாணிச்

# செகநாதர்பேரில் ஊசல்*

தேவர்தொழப் பாற்கடலிற் பள்ளி நீங்கித்
 தெசரதன்பால் வந்துகவு சிகன்பின் னேகி
வேள்விதனிற் றாடகையைப் பொருது வென்று
 வில்லொடித்துச் சானகியை வேட்டல் செய்து
தாவிவரு பிருகுபதி கருவ மாற்றித்
 தன்னகரில் வந்தமுகி லாடி ரூசல்
பூவைபது மாதனியொ டாடி ரூசல்
 புல்லாணி யெம்பெருமா னாடி ரூசல். (1)

சிற்றனையால் தன்னரசைத் தம்பிக் கீந்து
 தேவியுடன் சென்றுகெங்கா தீரந்தன்னில்
பற்றுகுகன் பணிகொண்டு சித்ர கூட
 பருவதத்தில் வாழ்ந்திடுநாட் பரதன் வந்து
நத்தியழைத் திடத்தன்பா துகையை யீந்து
 நகர்க்கனுப்பி யருண்முகிலே யாடி ரூசல்
பொற்கொடிபத் மாதனியோ டாடி ரூசல்
 புல்லாணி யெம்பெருமா னாடி ரூசல். (2)

---

* ஊசல் ஊஞ்சல் என்பன ஒருபொருட்சொற்கள். ஊசல் - இங்குத் தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகும். திருப்புல்லாணிச் செகநாதர் விஷயமாகவும் பதுமாசனித்தாயார் விஷயமாகவும் எழுந்த இப்பிரபந்தங்கள், இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் உபாக்ராஸநரான திரு. T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களுடைய காகிதக்கையெழுத்துப் பிரதியி லுள்ளவாறு வெளியிடப்பெறுகின்றன. இவற்றை இயற்றியவர்பெயர் முதலிய விவரமொன்றும் தெரியவில்லை. இரண்டையும் ஒருபுலவரே இயற்றியிருக்கலாமென்று தோன்றுகிறது. முதற்பதிகத்துள் இராமாயண சரிதம் முழுதும் முறையே சுருங்கக்கூறப்பட்டுளது. உதவியாசிரியர்.

தண்டக வனத்துவிரா தனைப்போய் மாட்டித்
தவமுனிவர் வாழ்ந்திடப்பஞ் சவடி தன்னிற்
கண்டுவரு சூர்ப்பனகி காது மூக்குங்
கடிந்துகர தூஷணரைக் கருதி வென்று
திண்டிறல்மா ரீசனெனு மாய மானைச்
சிரங்கொய்து மீண்டமுகி லாடி ரூசல்
புண்டரிகப் பூமகளோ டாடி ரூசல்
புல்லாணி யெம்பெருமா னாடி ரூசல். (3)

கவலைபெறத் தேவியைப்பி ரிந்து தேடிக்
கண்டசடா யுவுக்குமுத்தி கருணை நல்கித்
தவறில்கவந் தனைமடித்துச் சபரி தந்த
தண்ணறுங்காய் கனி நிவே தனமருந்திப்
பவியமதா யனுமன்வந்து பணிந்து போற்றப்
பம்பைநதி கண்டமுகி லாடி ரூசல்
புவனிபுகழ் பொன்மகளோ டாடி ரூசல்
புல்லாணி யெம்பெருமா னாடி ரூசல். (4)

அருள்நீடு சுக்ரீவற் கபய மீந்தங்
கவனுளக் கிட்கிந்தை யரசு நல்கி
மாமேழும் வாலியும்பட் டுருவ வெய்து
வாரிதிபோல் வானரங்கள் வந்து கூடத்
திருவாழி யீந்தருளிச் சீதை தன்னைத்
தேடவிட்ட ராகவனே யாடி ரூசல்
பொருளாருஞ் செல்வியுட னாடி ரூசல்
புல்லாணி யெம்பெருமா னாடி ரூசல். (5)

மன்னுதிரைக் கடல்கடந்தி லங்கை யூரில்
மைதிலியைக் கண்டுதிரு வாழி யீந்து
கன்னிமகிழ்ந் தருள்சூடா மணிகைக் கொண்டு
கனல்வீசி யவ்வூரைக் கரிக ளாக்கி
மின்னுநிலை யறிந்தனுமன் பணிந்து போற்ற
மெய்மகிழ்ந்த ராகவனே யாடி ரூசல்
பொன்னிபது மாதனியொ டாடி ரூசல்
புல்லாணி யெம்பெருமா னாடி ரூசல். (6)

வருந்திவரு வீடணனுக் கபய மீந்து
வருணன்வரத் தருப்பையிற்கண் வளர்ந்து பின்னை
விரிந்தகடல் தனைமலையாற் சேதுச் செய்து
வெள்ளமெழு பத்தினுடன் விரைந்து சென்று
தெரிந்தலர்வா ளவனகரைச் செருவ ளைந்து
தேவர்தொழ நின்றவரே யாடி ரூசல்
பொருந்துபது மாதனியொ டாடி ரூசல்
புல்லாணி யெம்பெருமா னாடி ரூசல். (7)

அரக்கரைவா னவர்வெல்ல விந்த்ர சித்தன்
அதிகாய னையுமிளையோ னமரில் வெல்ல
முருக்குசிறு களிறனைய கும்ப கன்னன்
மூலபலம் ராவணனை முழுதும் வென்று
துரைத்தனம்வீ டணற்குப்பட் டாபி ஷேகம்
சூட்டியருள் ராகவனே யாடி ரூசல்
பொருப்புமுலைப் பூமகளொ டாடி ரூசல்
புல்லாணி யெம்பெருமா னாடி ரூசல். (8)

மகிதலங்கள் புகழச்சீ தாபி ராமன்
வளமான புட்பகவி மானத் தேறி
மிகுபரத்து வாசமுனி சாலை தன்னில்
விருந்தருந்திக் குகனிடத்தில் மேவிப் பின்னை
அகமகிழ்ந்து பரதனடி பணிந்து போற்ற
அயோத்திநகர் வந்தமுகி லாடி ரூசல்
புகழ்பெறுபத் மாதனியொ டாடி ரூசல்
புல்லாணி யெம்பெருமா னாடி ரூசல். (9)

சீதையுடன் புண்ணியமஞ் சனங்க ளாடிச்
சிங்காத னத்திருந்து செங்கோல் கொண்டு
காதலுடன் பட்டாபி ஷேகங் கொண்டு
காசினிக ளீரேழுங் கனிந்து போற்ற
ஆதிமறை தொழுபுல்லா ரணியந் தன்னில்
அரசடியில் வாழ்ந்தமுகி லாடி ரூசல்
போதலர்பத் மாதனியோ டாடி ரூசல்
புல்லாணி யெம்பெருமா னாடி ரூசல். (10)

ஸ்ரீ:

## திருப்புல்லாணிப்

# பதுமாசனித்தாயார்பேரில் ஊசல்

வருணன்வந்த படிக்கிணற்றின் வளமை பாடி
வாகாக நின்றதிரு வரசைப் பாடித்
தருணமுகிற் பள்ளிகொண்ட கோலம் பாடிச்
சக்கரதீர்த் தப்புதுமை தன்னைப் பாடி
அருணகிர ணாபரண மான சோதி
யமைந்துபதி னாறுகலை யமைந்து தோன்றும்
புரணமதி முகத்தாளே யாடி ரூசல்
பூமே லிருந்தவளே யாடி ரூசல். (1)

பவளமதா லிருபுறமுங் கால்கள் நாட்டிப்
பளபளத்த வச்சிரத்தால் விட்டம் போட்டுத்
தவளமிருந் தரளமதாற் கயிறு பூட்டித்
தனிப்பெரிய மரகதத்தாற் பலகை சேர்த்துத்
தவமுனிவ ரமரர்மலர் மாரி பெய்யத்
தருணமட மங்கையர்கள் வடந்தொட் டாட்ட
அவனிபுகழ் புல்லாணி மாயன் மேவும்
அம்புயப்பூ மீதிருந்தா ளாடி ரூசல். (2)

இந்திரனுஞ் சசியுமொரு வடந்தொட் டாட்ட
ஈச்சுர னு முமையுமொரு வடந்தொட் டாட்டச்
சந்திரன்ரோ கணியுமொரு வடந்தொட் டாட்ட
சதுர்முகனும் வாணியுமோர் வடந்தொட் டாட்டக்
கந்தருவ ரிருபுறமுங் கீதம் பாடக்
கனிவுடன் அரம்பையர்கள் நடன மாடப்
பைந்தமிழ்சேர் புல்லாணி மாயன் மேவும்
பங்கயப்பூ மேலிருந்தா ளாடி ரூசல். (3)

பங்கயப்பூ மேலிருந்தா ளாடி ரூசல்
பாற்கடலிற் பிறந்தவளே யாடி ரூசல்
அங்கசனை யீன்றவளே யாடி ரூசல்
அன்பருக்கன் பானவளே யாடி ரூசல்
திங்கள்முக மின்னரசே யாடி ரூசல்
செந்திருவே சுந்தரியே யாடி ரூசல்
பொங்குபுகழ்ப் புல்லாணி மாயன் மேவும்
பூமே விருந்தவளே யாடி ரூசல். (4)

பாவியேன் றொலையாத செனனந் தோறும்
பாஞ்சாடிப் பாஞ்சாடி யூச லாடி
ஆவிபிறந் திறந்துழலும் வினைகள் தீர
அடிமையுள்ள மாகியமண் டபத்தி னூடே
மேவுமணிக் குழலசைய வாடி ரூசல்
விரைகமழ்தண் டுளவசைய வாடி ரூசல்
பூவனிதை வளர்மார்ப ராடி ரூசல்
பூமே விருந்தவளே யாடி ரூசல். (5)

கஞ்சமலர்த் திருவாழி கமலம் வாழி
கருடனொடு மனுமன்மிகு சேடன் வாழி
மஞ்சுதவழ் புல்லாணி மாயன் வாழி
மாமறையோர் வாழிமதி மன்னர் வாழி
தஞ்சமெனுந் தானிகர் தழைத்து வாழி
தாரணியுள் ளோர்வாழி தானும் வாழி
புன்சொலடி யேன்சொல்லும் பொறுத்து வாழி
பூமே விருந்தவளே வாழி தானே. (6)

# குறிப்புக்குப் பிற்குறிப்பு

செந்தமிழ்த்தொகுதி—௩௯ பகுதி-௫ பக்கம் ௨௪௯-ல், தற்கால அகத்தியராய் வெள்ளகாலில்விளங்கும் முதுபுலவர் முதலியாரவர்கள்குறிப்பைப் படித்தேன். ‘தொழுதல்’ பணிவையும், ‘தழுவல்’ உயரான்மையையும் குறிக்கும்—என்ற என்கூற்றை மறுத்து, “மைந்தன் தந்தையைத்தழுவுதலில் உயர்வுணர்வில்லையென்பது தெளிவு” -என வற்புறுத்துகிறார்கள். அத் தன்கொள்கைக்குச் சான்றாக, “குகன் தன்தந்தையைத் தழுவுதலில் தனக்குண்டாம் களிப்பினும் அதிகமான களிப்புண்டாகப் பரதனைத் தழுவினான்: என்று கூறப்பட்டிருக்கிற” தாகக் காட்டுகிறார்கள்.

முதலில் அவர்கள் காட்டும் மேற்கோட்பாட்டே வாதச்செய்யுளாய், அதன் பொருள்பற்றி எம்மிடை உறழ்வுரைகள் நிகழ்ந்தன. அதில் அடிவீழ்ந்தவன் யார்? தழுவினவன் யாவன்? என்பது தானே விவாதம்? விழுந்து தொழுத குகனைப் பரதன் தழுவினானென்பதே கம்பர் அப்பாட்டிற் கூறும் பொருளென நான் ஏதுக்காட்டி வாதிக்குமிடையே, பரதனைக் குகன் தழுவினதாய்க் கம்பர் அதிற் கூறினதாகப் பொருள்கொண்டு அதனையே மேற்கோளாய்க் காட்டுவது அளவைமுறையாகாது; அஃது அவர்கள் கூற்றுக்கு ஆதரவும் ஆகாது.

இனி, “தந்தையினும் களிகூரத்தழுவினான்” என்பதில், களிகூர்தலுக்குத் தந்தை எழுவாயாவதன்றிச் செயப்படுபொருளாகாது. ‘தந்தையினும் களிகூர’ என நின்றாங்கே சொற்றொடரின் செம்பொருளைக்கொள்ளுவதே புலமையறம். அதைவிட்டுத் ‘தந்தையைத் தழுவுதலினும் களிகூர’ எனச்சொற்பெய்து பொருள் மாற்றத் துணிவானேன்? தழுவினவன் குகனாக, பரதனேயாக. தழுவுதலால் உற்ற களி, மகனைத்தழுவும் தந்தையின்களியினும் மிக்கது என்பதே இதில் உவமைக்குறிப்பாதல் வெளிப்படை. அதனால், மகன் தந்தையை உயர்வுணர்வின்றித் தழுவி மகிழ்வதற்கு இது மேற்கோளாமாறில்லை.

தலைப்படுமிருவர் தம்மிடை ஒத்தால், ஒத்த ஓர்முறையில் ஒருவரையொருவர் வணங்குதல் வழக்கு; ஒவ்வாவிடத்தே, தாழ்ந்தோர் தொழுவதும், பெரியோர் தழுவலும் தொன்றுதொட்டு என்றும் தமிழகமரபாம். தந்தையை மகனும் குரவரைச் சிறுவனும் தழுவிமகிழ்வது தமிழ்ப்பழஞ்செய்யுளிற் காணுதல் அருமை. தொழுதலும் தழுவலும் அன்புகொண்டெழுவன; எனினும், இவ்விருவினையும்செய்பவருள்ளத் திருதிறக்குறிப்பையுணர்த்தும் குறியாம். இன்னும் இதனில் ஐயமும் உண்டோ? 'வந்தெதிரேதொழுத' —கம்பர்கவிக்கருத்துப்பற்றி இனி யான் இவர்களோடு வாதம் தொடுக்க விரும்பமாட்டேன்.

தழுவுதலின் உளக்குறிப்புத் தமிழ்ச்செய்யுளிற் கூறும்முறை பொதுவாதலின் அதன் உண்மைதேரும் ஆவலால் இவ்விளக்கத்தைக் குறிக்கலானேன். இதில் பெரியார் தவறுநினையாரென நம்புகிறேன்.

பசுமலை,
18—6—1942.

*S. S. Bharati.*

---

# பிழைதிருத்தம்

செந்தமிழ்த்தொகுதி-39 பகுதி-6ல் உகூச-ஆம் பக்கத்து 9-ஆம் வரியில் தூறார் என்றிருப்பதை, தூறூர் என்றும், ஷை பக்கம் 14-ஆம் வரியில் கலழடைந்த என்றிருப்பதை, கழலடைந்த என்றும் திருத்திப் படித்துக்கொள்க.

---

உ

# தத்துவப்பிரகாசர்காலம்

[மு. அருணாசலம், எம்.ஏ.]

தமிழிலக்கியத்தின் சரித்திரத்தையும் தமிழ்ப்புலவர்களின் சரித்திரத்தையும் காலமுறைப்படி அறிவதற்குரிய சாதனங்கள் மிகக் குறைவானவை. மேனாடுகளின் இலக்கியசரிதத்தைப் பார்த்தோமானால், புலவர்களுடைய சரித்திரங்கள்யாவும் விளக்கமாகத் தொகுத்துவைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பெரும் புலவர்களைப்பற்றிமட்டுமல்ல, ஒருபாட்டு, இரண்டுபாட்டுக்களே பாடிய புலவர்களைப்பற்றியுங்கூட, அவர்கள் பிறந்தகாலமும், இறந்தகாலமும், அவர்கள்வாழ்க்கையில்நடந்த பல்வேறுநிகழ்ச்சிகளும் குறித்துவைக்கப்பட்டுள்ளன. இதுகாரணமாக, அந்நாட்டு இலக்கியசரித்திரத்தைக் கோவையாக உணர்தல் எளிதாயுள்ளது. தமிழிலே புலவர்களைப்பற்றி இத்தகைய குறிப்புக்கள் இல்லாமை, இலக்கியசரித்திரவுணர்ச்சிக்குப் பெரிதும் இடர்ப்பாடு விளைவிக்கிறது.

இந்நிலைமைக்கு ஒருவகையிற் காரணம் கூறமுடியும். தமிழிலக்கியத்தோடு மேனாட்டு இலக்கியங்களிற் பெரும்பாலனவற்றை ஒப்புநோக்குங்காலத்து, அவையனைத்தும் மிகமிகச் சமீபகாலத்தனவாயிருத்தல் புலப்படுகிறது. சமீபகாலநிகழ்ச்சிகளைக் குறிப்பிடுமிடத்துக் காலமுறையைப் பொருந்தக்கூறுதல் இயலும். தொன்மையான நிகழ்ச்சிகளுக்கு இந்த முறைப்படி கூறுதல் அத்துணை எளிதன்று. ஆக்வே, பழைய வரலாறுகளுக்கே காலங்கூற முடியாதநிலையில், சமீபகாலநிகழ்ச்சிகளுக்கும் காலமுறை அவசியமாக வேண்டுவதில்லையென்றே தமிழ்மக்கள் கருதிவிட்டார்களெனத் தோற்றுகிறது. நூல்களையறிந்து சுவைத்து அனுபவிப்பதே போதியதாகுமெனக் கருதிவிட்டார்கள். எனவே, சரித்திரவுணர்ச்சி குன்றிவிட்டது.

தமிழிலக்கியம் என்று பொதுப்படக்கூறுகையில், சமய இலக்கியங்கள் இவ்வுண்மைக்கு விலக்கல்ல. சமயாசாரியர்கள் சிலருடைய காலம், சைவத்திலும் சரி, வைணவத்திலும் சரி, இன்னும் வரையறுத்துக் குறிப்பிடமுடியவில்லை.

இவை இங்ஙனமிருந்தபோதிலும், சைவசாத்திரங்கள்செய்த பெரியார்சிலருடைய காலத்தை அறுதியிட்டுக்கூறுதற்கு அனுகூலமாக இரண்டு முக்கியமான குறிப்புக்கள் கிடைத்திருக்கின்றன. முதலாவது, கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியர்செய்த சங்கற்ப நிராகரணம் என்ற நூலின் பாயிரத்துள்ள பின்வரும் வரிகள்.

"எழுஞ் சிருநா றடுத்த ஆயிரம்
வாழுநற் சகன் மருவா நிற்ப :"

இதனால், சக ஆண்டு ௧௨௩௫-ல் உமாபதி சிவாசாரியர் இந்த நூலைச்செய்தார் என்பது பெறப்படுகிறது. இச் சகஆண்டு கி. பி. 1313-க்கு நேராகும். சைவசித்தாந்த சந்தானாசாரியர்களாகிய மெய்கண்டார், அருணந்தியார், மறைஞானசம்பந்தர், உமாபதியார் என்னும் நால்வருடைய காலமும் கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்துதொடங்கிக் கி. பி. 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தோடு முடிகிறது என்று இதனால் ஒருவாறு விளங்குகிறது.

மற்றொரு முக்கியமான குறிப்பு, மேற்சொன்ன உமாபதி சிவாசாரியர்செய்த சிவப்பிரகாசம் என்ற சித்தாந்தசாத்திரத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் என்ற பெரியார்செய்த உரையின் சிறப்புப் பாயிரத்திற் காணப்படுகிறது. அது வருமாறு:

"ஓதுபுகழ்ச் சகாத்த மாயிரத்து நானூற்
றேருபதின்மேற் செல்கின்ற காலந் தன்னில்
மாதுபயில் மதுரையில்வாழ் சிவப்ர காசன்
வண்மையருள் நிகழ்ச்சியினு லுண்மை யாக
ஈதுமலம் ஈதுவினை ஈது மாயை
ஈதுயிர்பின் ஈதுசிவம் என்றே காட்டித்
தீதில்சிவப் பிரகாசச் செய்யுள் நூறும்
தேர்ந்துரையிட் டேயுலகிற் சிறப்பித் தானே."

இதனல், மதுரைச் சிவப்பிரகாசர் உரைசெய்தகாலம் சகம் கசகO, அதாவது, கி. பி. 1488 என்று தெரிகிறது. இந்தக்குறிப்பு, பல நூல்களின்காலத்தையும் ஆசிரியர்களின்காலத்தையும் ஒரு வகையாக அறுதியிட உதவுகிறது. தத்துவப்பிரகாசர் என்பவருடைய காலத்தைமட்டும் இங்குக் கருதலாம்.

இந்தத் தத்துவப்பிரகாசரென்பவர் சிறந்த சைவசித்தாந்த நூல்களுள் ஒன்ருகிய தத்துவப்பிரகாசம் என்ற நூலைச் செய்தவர். விரிந்தநூலாகிய சிவஞானசித்தியார், ஞானமார்க்கமொன்றையே பிரதானமாகப் போதிக்கிறது. இதைச் செய்தவர் 13-ஆம் நூற்ருண்டிலிருந்த அருணந்திசிவாசாரியர். தத்துவப்பிரகாசர், சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கு நெறிகளையும் தம் நூலில் விரித்துக் கூறுகிருர். மேலே குறிப்பிட்ட மதுரைச் சிவப்பிரகாசர், தமதுரையில் இரண்டிடங்களில் தத்துவப்பிரகாசத்துள்ள செய்யுட்களை (21, 134) எடுத்து உதகரிக்கிருர். அவர் கூறுகிற முறையினலே, சித்தியாருக்குள்ள பெருமை இந்நூலுக்குமுண்டு என்பது புலப்படுகிறது. இவற்ருல், தத்துவப்பிரகாசமானது சிவப்பிரகாசர் சிவப்பிரகாசவுரைசெய்தகாலமாகிய கி. பி. 1488க்கு முந்தியதென்றும், அக்காலத்தே அதற்கு மிக்க பெருமை ஏற்பட்டிருந்ததென்றும் உணரலாம். ஆகவே, தத்துவப்பிரகாசர் இந்த ஆண்டுக்கு வெகுகாலம் முன்னதாகவே வாழ்ந்தவராகிருர்.

இனி, இவ்வாசிரியர், தம்நூலின் பாயிரத்துள் இரண்டுசெய்யுட்களால் ஆசாரியவணக்கங்கூறுகிருர்.

"நந்திசனற் குமரன்சத் தியஞானி யடிசேர்
நாதனும் பரஞ்சோதி மெய்கண்ட தேவன்
முந்துசண் பையர்தலைவன் கொற்றவன் குடியே
முதுபதியாம் உமாபதியிம் முறைமையிலே யாண்ட
செந்திருவின் பயன்சிற்றம் பலநாடி ஞன்மெய்ச்
சிவஞான வடிவான திருமேனி யடைவாய்த்
தந்தவிவர் சந்தான குரவரிவர் மலர்த்தாள்
தப்பாம லேமனத்தி லொப்பாக வைப்பாம்."

"மனநினைவில் வாக்கிலனை வருக்குமறி வரிய
வள்ளல்கள் ளத்தினன் மறுகுமறி விலியேன்
தனைநினைவி லுட்கொண்டே யவனவளோ டதுவாந்
தன்மையினின் மலவடிவு தன்னை மன்னித்
தினையனைய வளவிலிரு வினைதுலையொப் பறிந்து
சீகாழி மன்னுசிற்றம் பலநாடி ஞனென்
முனைவினையு முடல்வினையும் வருவினையு மறுத்து
முத்தியளிப் பவன்மலர்த்தாள் சித்தமுற வைப்பாம்."

இவற்றால், தத்துவப்பிரகாசர், மெய்கண்டதேவரது சந்தான பரம்பரையில் வந்தவரென்பதும், சீர்காழிச் சிற்றம்பலநாடிக ளுடைய மாணவரென்பதும் புலனாகின்றன.

"சிவநந்தி சனற்குமரன் சிற்சத்ய ஞான
தெரிசிபரஞ் சோதியொடு மெய்கண்ட நாதன்
நவமறையான் ஞானகுரு உமாபதிமச் சுறைவான்
நற்சிற்றம் பலநாடி பழுதைகட்டும் பந்தன்
சிவபுரத்துத் துவப்பிரகா சன்திருவா ரூரிற்
செட்டித்தெரு ஞானப்ர காசன்பின் பவ்வூர்ப்
பவமொழிக்குஞ் சிதம்பரநா தன்ஞான ப்ரகாசன்
பயில்தருமைத் திருஞான சம்பந்த ஞகும்"

என்று தருமபுரஆதீனபரம்பரை கூறும் ஒருபாடலினாலே, உமாபதியாருக்குப்பின் ஆசாரியபரம்பரையில் தலைமைவகித்தவர்கள் மச்சுறைவார், சிற்றம்பலநாடிகள், பழுதைகட்டும்பந்தர், தத்துவப் பிரகாசர், கமலை ஞானப்பிரகாசர், சிதம்பரநாதர், ஞானப்பிரகாசர், தருமையாதீன ஸ்தாபகராகிய குரு ஞானசம்பந்தர் என்பது தெரி கிறது. குரு ஞானசம்பந்தர், கமலை ஞானப்பிரகாசகருக்குப்பின் மூன்றுவது முறையில் தலைமைபூண்டபோதிலும், தம்மை அவ ருடைய சீடரென்றே கூறிக்கொள்வார். அவ்வாறே தத்துவப் பிரகாசரும், சிற்றம்பலநாடிகட்குப் பின் இரண்டாமுறையாகத் தலைமைபெற்றபோதிலும், தம்மைச் சிற்றம்பலநாடிகளின் சீடரென் றே கூறிக்கொள்வதை மேலே கண்டோம். எனவே, இவர் சிற்றம்பல நாடிகளின் நேர்மாணவர் என்றே கொள்ளலாம்; இப்படிக் கொள்வ தே மரபாகவும் இருந்துவருகிறது. (சிற்றம்பலநாடிகளுக்கும் செட்டித்தெரு ஞானப்பிரகாசருக்குமிடையில் பின்னும் பல ஆசாரி யர்களைச் சேர்த்துக்கூறுவது வழக்கம்.)

மச்சுறைவார் என்னும் அருணமச்சிவாயருடைய மாணுக்கர் காழிக் கங்கை மெய்கண்டார் என்றும் இவர் மாணுக்கரே சிற்றம்பல நாடிகள் என்றும் மற்ருெரு வரலாறு கூறுகிறது; சிற்றம்பலநாடிகள் தம் நூல்களிற் கங்கை மெய்கண்டாரைத் துதிக்கிருர். எனவே, உமாபதியாருக்குப்பின்வந்த சிற்றம்பலநாடிகள் இந்த ஆசாரிய பரம்பரையில் மூன்ருந்தலைமுறையினர். தலைமுறையொன்றுக்கு உ௫ ஆண்டுகள்வீதம் கணக்கிட்டால், உமாபதியார்காலம் கி. பி. 1313 என மேலே கூறியதை நோக்கும்போது, சிற்றம்பலநாடிகள் காலம் ஏறக்குறைய 1390–ஐ ஒட்டியிருக்கலாம். சிற்றம்பலநாடிகள் சமாதியடைந்தகாலத்திலே, அவர் மாணுக்கரனைவரும் உடன் சமாதியடைந்தனர் என்பது சரித்திரம். அங்ஙனமாயின், தத்துவப் பிரகாசர்காலமும் இதுவேயாகும். அன்றியும், இவர் மதுரைச் சிவப்பிரகாசருக்கு (அதாவது 1488-க்கு) நெடுநாள் முந்தியவர் என மேலே கூறியதற்கும் இக்காலம் பொருத்தமாகும்.

இவற்ருல், தத்துவப்பிரகாசம்செய்த தத்துவப்பிரகாசர்காலம் 14-ஆம் நூற்ருண்டின் இறுதி என்று ஏற்படுகிறது.

தமிழ்நாவலர்சரிதையிலே தத்துவப்பிரகாசர் என்ற ஒருவருடைய சரித்திரக்குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவைகளிலிருந்து இப்பெரியார் 1509 முதல் 1530 வரை அரசாண்ட விஜயநகரத்தரசரான கிருஷ்ணதேவராயரால் பெரிதும் கௌரவிக்கப் பெற்று வாழ்ந்த ஒரு சிவஞானியென்று விளங்குகிறது. காலஞ்சென்ற திரு. சோமசுந்தரதேசிகரவர்கள், இவ்வரலாறுகளை ஆராய்ந்து, தத்துவப்பிரகாசம்பாடிய தத்துவப்பிரகாசரும் கிருஷ்ணதேவராயரால் ஆதரிக்கப்பெற்ற தத்துவப்பிரகாசரும் ஒருவரே எனக்கொண்டு, அவர்காலம் 16-ஆம் நூற்ருண்டு என முடிவுகட்டினர்கள்.* ஆனுல், மேற்சொன்னவற்ருல், தத்துவப்பிரகாசம் பாடிய தத்துவப்பிரகாசர் 14-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்தவர் என்பதும், தமிழ்நாவலர்சரிதையிற் குறிப்பிடப்படும் தத்துவப்பிரகாசர் அவரினும் வேருய் 16-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்தவரென்பதும் பெறப்படும்.

---

* பதினறம் நூற்றண்டுத் தமிழ்ப்புலவர்கள் வரலாறு, பக்கம் 11-23.

இனி, இவ் விரு தத்துவப்பிரகாசரேயன்றி, மற்றொரு தத்துவப்பிரகாசரும் இருந்தார் என்று தெரியவருகிறது. கமலை ஞானப்பிரகாசர் 16-ஆம் நூற்றூண்டின் பிற்பாதியில் வாழ்ந்தார் என்பது திரு. தேசிகரவர்கள் முடிபு.* இப்பெரியாருடையசீடர் திருவொற்றியூர் ஞானப்பிரகாசர். இவர் பாடிய நூல் திருவொற்றியூர்ப்புராணம். சிவஞானசித்தியார் பரபக்கத்துக்கு இவர் ஒருரை செய்திருக்கிறார். இவ்வுரைக்குப்பின், தத்துவப்பிரகாசர் என்பார் அதே பரபக்கத்துக்குப் 'பதவிருத்தி' செய்தார். இது,

"தத்துவய லொற்றியூர் ஞானப்ர காசனருட்
சித்தி படருரையைச் செப்பியபின்—வித்தகமாந்
தத்துவப்ர காசன் பதவிருத்தி தான்செய்தான்
உத்தமர்சித் தத்தொருமை யாய்"

என்ற வெண்பாவால் தெரியவருகிறது. இவ்வுரை அச்சாகி இப்போது வழக்கிலுள்ளது; இதனுள், சௌத்திராந்திகன்மதமறுதலைக்கு உரையெழுதுமிடத்து, பிம்பசாரகதை, சித்தாந்தவசனம் முதலிய புத்தநூல்களிலிருந்து இவ்வாசிரியர் சிற்சில மேற்கோள்களைக் காட்டுகிறார். இவர் கமலை ஞானப்பிரகாசரின் மாணுக்கருக்குப்பின் வந்தவர். ஆகவே, இவர்காலம் 16-ஆம் நூற்றூண்டின் இறுதியாயிருத்தல்கூடும்.

இவற்றால், தத்துவப்பிரகாசர் என்னும் பெயருடைய சைவப்பெரியார் மூவர் இருந்தனர் என்று விளங்குகிறது. முதலாமவர் தத்துவப்பிரகாசம் பாடியவர்; காலம், 14-ஆம் நூற்றூண்டின் இறுதி. இரண்டாமவர், தமிழ்நாவலர்சரிதையிற் சுட்டப்பெற்றவர்; காலம், 16-ஆம் நூற்றூண்டின் முற்பாதி. மூன்றாமவர் சித்தி பரபக்கத்துக்கு உரைசெய்தவர்; காலம் 16-ஆம் நூற்றூண்டின் இறுதி.

---

* பதினாறும் நூற்றாண்டுத் தமிழ்ப்புலவர்கள் வரலாறு, பக்கம் 122.

# மதிப்புரை

மணிமேகலையின் நடுப்படை உபதேசங்கள் (Central Teachings of Manimekhalai):—இவ்வாராய்ச்சியுரை ஆங்கிலமொழியில் வரையப்பெற்றது. ஸ்ரீ. N. ஐயாஸ்வாமி சாஸ்திரிகள் இதன் ஆசிரியராவர். இது, ஸ்ரீவேங்கடேசுவர கீழ்த்திசைக்கலாநிலயப் பத்திரிகை மூலம் வெளிவந்துள்ளது.

மணிமேகலைநூலின் முதன்மையான அறவுரை பொதிந்த இடம் முப்பதாங்காதையாகும். சார்பிற்றோற்றம் முதலான புத்த சமயக்கோட்பாட்டினைப் புலன்கொளவிரிக்கும் அக்காதையின் தெளிபொருள்விளக்கமாக இவ் வாங்கிலக்கட்டுரை அமைகின்றது என்னலாம்.

பாலிபாஷையிலும் வடமொழியிலும் வழங்கும் புத்தசமய நூல்களையும் உரைகளையும் உறுதுணையாகக்கொண்டு இத்தமிழ் நூற்பகுதியை ஆராய்ச்சியாளர் செவ்வையாக மொழிபெயர்த்திருக்கிறார். மணிமேகலையின் உபதேசங்கள் அவ்வேற்றுமொழிச் சமயசாத்திரங்களோடு பொருளான்மட்டுமன்றி, நேர் மொழிபெயர்ப்பான சொல்லானும் ஒற்றுமைபெற்றுநிற்றலை ஆசிரியர் விளக்கியுள்ளமுறை யாவரும் படித்து இன்புறற்பாலது. இதனால் எத்துணையோ பல அருஞ்சொற்றொடர்களுக்கு உண்மைப்பொருள் காண்டலும் எளிதாகின்றது.

இவ்வாராய்ச்சியுரையேயன்றி ஸ்ரீ. N. ஐயாஸ்வாமி சாஸ்திரிகளின் மற்றும் சில கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. அவை முறையே, சீனபாஷையில் சூத்திராலங்காரம், சீனபாஷையில் சாங்கிய காரிகையின் ஓர் வியாக்கியானம், அறவணவடிகள், சௌத்திராந்திகர்களின் சில கோட்பாடுகள், ஆசீவகர்கள்: என்னுந் தலைப்பெயர் புனைந்தனவாம்.

இவை யாவும் எழுதியவரின் மிக்க மதிநுட்பத்தையும், பரந்த நூலறிவையும், பௌத்தசமயநூற்பயிற்சியையும் தெற்றென விளக்குகின்றன. இவற்றிற் காணப்படும் சில சரித்திர உண்மைகள் புதுவழியில் ஆராய்ச்சிசெய்ய உபகாரப்படுவன.

இங்ஙனம் சிறந்தமுறையில் எழுதப்பெற்ற இக்கட்டுரைகள் பிறிதொரு மதிப்புரையின் துணைவேண்டாமல் படிப்பவரின் நன்மதிப்பைத் தாமே தேடிக்கொள்ளவல்லன. இவற்றைத் தொகுத்துத் தனிப்புத்தகமாக்கியும் தமிழில் மொழிபெயர்த்தும் உதவக் கூடுமாயின் பலர்க்கும் பயன்படுதல் ஒருதலை.

ஞானசம்பந்தம்:—இது, தருமபுர ஆதீனத்திலிருந்து விஷு-வருஷ கார்த்திகைமாதந்தொடங்கி இயங்கிவரும் ஒரு திங்கள் வெளியீடாகும். தருமபுரஆதீனத்து ஒடுக்கம் ஸ்ரீ. சிவகுருநாதத்தம்பிரானவர்கள் இதன் ஆசிரியராவர். இதன் ஐந்தாவதுஇதழ் நமது பார்வைக்குவந்தது. அதில் அறிஞர் பலர் வரைந்த தமிழ்ப் பொருளுரைகளும் ஆங்கிலக்கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. அவை தமிழறிவும் சைவசமயவுணர்வும் வளர உதவுவன. இது மேன்மேலும் வளர்ந்து தமிழ்த்தொண்டும் சைவசமயப்பிரசாரமும் தக்கவாறு புரிந்துவருமென்று நம்புகிறோம். இதன் ஆண்டுக் கட்டணம் உள்நாடுகளுக்கு ரூ. 1—8—0. வெளிநாடுகளுக்கு ரூ. 2—0—0. தனிப்படி ரூ. 0—2—0. அஞ்சற்கூலி வேறு. வேண்டுவோர் தருமபுர ஆதீன ஏஜண்டு ஸ்ரீ. K. சுந்தரேசையரவர்களிடம் பெறலாம். தருமபுர ஆதீனத்தார் தங்கள் ஆதீனத்துக்குச் சொந்தமான ஆலயங்களில் திருவிழாநிகழுங்காலத்துத் தக்கபுலவர்களால் தமிழுணர்வும் சமய அறிவும் மிகுமாறு பிரசாரம் புரிந்து வருவதுடன் இத் திங்கள்வெளியீட்டினையும் அதனைத் திறம்பட நடத்த முற்பட்டிருப்பது பாராட்டத்தக்கது.

தமிழணங்கு:—[ஆண்டுவரி (உள்நாடுகளுக்கு) ரூ. 1—4—0. (வெளிநாடுகளுக்கு) ரூ. 2—4—0. ஆயுள்வரி (உள்நாடுகளுக்கு) ரூ. 25—0—0. (வெளிநாடுகளுக்கு) ரூ. 35—0—0. தனி இதழ் ரூ. 0—2—0. கிடைக்குமிடம்:—தமிழணங்கு அச்சுக்கூடம், ஆம்பூர், N. A.]

ஆம்பூர்த் தமிழரணிலிருந்து திரு. மா. சிவஞானம் என்பவரை ஆசிரியராகப்பெற்று வெளிவரும் இம்மதிமுகத்தாளின் இரண்டாவதுமலரின், அ, கூ, ௰-ஆம் இதழ்கள் இணைந்த பிரதியொன்று வரப்பெற்றோம். இதனுள், தமிழ் தமிழ்ப்புலவர் தமிழ்ப்புரவலர் தமிழ்ப்பெரியோர் விஷயமான புகழுரைகளும் தத்துவமும் மருத்துவமும்பற்றிய கட்டுரைகளும் நூலாராய்ச்சியும் காவியநயங்களுமான பொருளுரைகளும் கதைகளும் பிறவும் பல புலவர்களால் யாவரும் விரும்பிப்படிக்கும் இனியநடையில் தெளிவா யெழுதப்பட்டுள்ளன. தமிழ்வளர்ச்சிக்கு இத்தகைய வெளியீடுகள் எத்தனை தோன்றினும் அமையும். கொடும்பெரும்போர்விளைவால் காகிதம் முதலியவற்றின் விலை யேறியுள்ள இக்காலத்து இன்னோரன்ன வெளியீடுகள் இடையீடின்றி நிகழுமாறு ஆதரித்துவருவது தமிழ்மக்கள் கடமையாகும்.

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2. | கணுநால் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| 3. | *வளையாபதிச்செய்யுட்கள் ... ... ... | | | |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | *நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | | | |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ... | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... ... ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 11. | *விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் ... ... | | | |
| 12. | *பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | *திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 23. | *விக்கிரமசோழனுலா ... ... ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை... ... ... | 0 | 8 | 0 |
| 28. | *சந்திராலோகம் ... ... ... | | | |
| 29. | *சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | | | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 32. | மனீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | *அகப்பொருள்விளக்கம் ... ... ... | | | |
| 35. | *திருமந்திர நூறுபாட்டுக்குரை ... ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | *பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்) | | | |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 43. | மேகவிநோத ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | *கடைவள்ளலார்காலம் ... ... ... | | | |
| 50. | *தமிழரும் ஆந்திரரும் ... ... ... | | | |
| 51. | *மதங்கசூளாமணி ... .. ... | | | |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (தமிழ்) ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில்அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 66. | சந்திரகுப்தன் ... ... ... | 0 | 6 | 0 |
| 67. | அமிர்தாஞ்ஜலி ... ... ... | 0 | 2 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 38 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.